மே 2004


www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



தேர்தல் புறக்கணிப்பு சிறப்பிதழ் - II



# தேர்தல் களத்தில் நரபலி!

படிப்பகம்

www.padippakam.com

# பிழைப்புவாதமே தலித்தியமாக...

**(புதிய ஜனநாயகம் மார்ச் - 2004 இதழில் வெளிவந்த ‘‘சேரிக்கு இழிவைத் தேடித் தரும் தலித் தலைவர்கள்’’ என்ற கட்டுரைக்குப் பதில் என்ற பெயரில் ‘‘தலித் முரசு’’, ‘‘தாய் மண்’’ இதழ்கள், புதிய ஜனநாயகம் மற்றும் ம.க.இ.க. பற்றி செய்து வரும் அவதூறுகளுக்கு ஓர் எதிர்வினை)**

- *தலித்தியமா? பிழைப்புவாதமா?<br>சேரிக்கு இழிவைத் தேடித்தரும்<br>தலித்தலைவர்கள் என்றவுடன்<br>சினந்து பாயும் சிறுத்தைகளே,<br>பிறப்பால் தலித்தாய் இருந்தால் போதுமா?<br>நீங்கள் நடப்பால் சேரியை இழிவுபடுத்துவதை<br>வெறும் கடுப்பால் மறைத்திட முடியாது.*

- *தாழ்த்தப்பட்ட மக்களின் வாயில்<br>சாணிப்பாலைத் திணித்த மூப்பனாரிடம்<br>தேர்தல் திருவிழாவுக்காக<br>‘ஞானப்பால்’ குடிக்கப் போனது<br>விடுதலைச் சிறுத்தைகளா? ம.க.இ.க.வா?*

- *பாட்டாளி மக்கள் கட்சி என்று தொடங்கும் போதே<br>இது ஏமாற்று, ராமதாஸ் வன்னிய சாதி வெறியர் என்று<br>பட்டவர்த்தனமாகப் படம் போட்டுச் சொன்னது<br>புதிய ஜனநாயகம்.<br>‘டாக்டர் ஐயாவுக்கு’ தமிழ்குடிதாங்கி பட்டம் கொடுத்து<br>ஆதிக்கச்சாதி நோய்க்கு அரிதாரம் பூசியது<br>அண்ணன் திருமாவளவனா? புதிய ஜனநாயகமா?*

- *கழிசடை நாயகன், காரியக்கிறுக்கன்<br>ஆர்.எஸ்.எஸ். உண்ணி, அயோக்கிய ரஜினி<br>என நாங்கள் பிரச்சாரம் செய்யும் போது<br>ரஜினி எங்கள் கூட்டணியையே ஆதரிக்க வேண்டும்<br>என தலித் மக்களின் தன்மானத்தை இழிவுபடுத்துவது<br>திருமாவளவனா? ம.க.இ.க. மருதையனா?*

- *காவிரி உண்ணாவிரதத்தில் ரஜினியின் பக்கத்தில்<br>‘ஒன்னுக்கிருக்க’ எழுந்து போனால் கூட<br>உட்கார்ந்த இடம் போய்விடும் என்று<br>ஒட்டுண்ணி போலக் கிடந்து<br>மண்ணின் மைந்தர்களின் மானத்தை வாங்கியது<br>டாக்டர் கிருஷ்ணசாமியா? தோழர் மருதையனா?*

- *சேலத்தில் இந்துத்துவ பண்பாட்டுத் திணிப்புக்கு எதிர்ப்பு!<br>சிதம்பரத்தில் இந்துத்துவ பூர்ணகும்பத்திற்கு ஏற்பு!<br>மேலவளவுக்கும், தாமிரபரணி படுகொலைக்கும்<br>நாங்கள் என்ன செய்து கிழித்தோம் என்பது<br>உழைக்கும் தலித்துகளுக்குத் தெரியும்.<br>ஓட்டுப் பொறுக்குவதற்காக<br>நந்தனை எரித்த பரம்பரை தில்லை வாழ் அந்தணர்கள்<br>இந்துத்துவக் கூட்டாளிகளாய் உங்களை<br>தங்களது பூணூலில் இழுத்துக் கோர்க்கும்போது<br>‘சேரி மக்களை சண்டாள சாதி என்றாயே நாயே...!’ என<br>எதிர்த்து நீங்கள்<br>எதையும் கிழிக்காவிட்டாலும் பரவாயில்லை;<br>சட்டைக் கழற்றிவிட்டு<br>இளிக்காமலாவது இருக்கக் கூடாதா?*

- *தலித்துகளுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு நியாயமென்றும்,<br>தென்மாவட்டக் கலவரத்தை தேவர் சாதி வெறி என்றும்<br>குஜராத் கலவரத்தை பார்ப்பன பயங்கரவாதமென்றும்<br>குறிப்பாக எதிரிகளை இனங்காட்டிப் போராடுவதில்<br>மதிப்பாக அம்பேத்கரை ஏற்றுக் கொண்டவர்கள் நாங்கள்.<br>அம்பேத்கர் படம் காட்டினாலே அம்பேத்கரியம் என்று<br>இரண்டகம் பேசும் அம்பிகளே...!<br>ஆர்.எஸ்.எஸ்.-இன் ‘‘விஜயபாரத’’த்திலும்<br>அம்பேத்கரின் அட்டைப்படமுண்டு;<br>அத்வானி ரதயாத்திரையில் கூட அம்பேத்கர் படமுண்டு.<br>போனாலும் போவீர்கள் உங்களுக்கென்ன?<br>தேவர் பேரவை சேதுராமனையும்<br>தில்லு முல்லு கண்ணப்பனையும்<br>பக்கத்தில் வைத்துக் கொண்டு<br>தலித் கூட்டணி என்று ‘கோனார்’ உரை எழுதி<br>சேரி மக்களை ஏமாற்றுவதில் சிறுத்தைகள்தான் நீங்கள்.*

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

**நந்தனை எரித்த சிதம்பரம் கோவில் தீட்சிதர்களின் வாரிசுகள் கொடுத்த ‘முதல் மரியாதை’யில் பூரித்துப் போகும் திருமாவளவன்: ஓட்டுக்காக அடங்கிப் போனது சிறுத்தை!**





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 19

**இதழ் 7**

மே 2004

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.


# இலவச சேலை தூக்குக் கயிறென்றால் இந்திய ஜனநாயகம்தான் தூக்குமரம்!



*இந்தச் சோகத்தின் முத்திரை
எந்தச் சின்னத்தின் மீது பதியும்?*

*இந்தக் கண்ணீரின் வெம்மை
எந்தக் கவிஞனின் இதயத்தைத் தீண்டும்?*

*இந்த கண்ணகியின் கோபம்
எந்த மாநகரைத் தீக்கிரையாக்கும்?*

*தாமரை ஒரு சின்னம்
வாஜ்பாய் ஒரு கவிஞன்
லக்னோ ஒரு மாநகரம்*

*ஒன்று மட்டுமா?
இந்தச் சிறுமி ஒருத்தி மட்டுமா?*

*கண்ணீரும் கதறலும்
வற்றிப் போன இந்தத் தேசம்
வாக்குச்சீட்டில் மிதந்தா கரையேறிவிடும்?*

*மொழியும் உணர்ச்சியும் மக்கிப் போன
இந்த மண்ணை
உயிர்ப்பிக்கவல்ல ஒரு மருந்து, ஒரே மருந்து -
வெடிமருந்து!*

*இலவச சேலை தூக்குக் கயிறென்றால்
இந்திய ஜனநாயகம்தான் -
தூக்குமரம்.*

www.padippakam.com

# போலி ஜனநாயக அரசமைப்பைத் தூக்கியெறிவோம்! மக்கள் சர்வாதிகார மன்றங்களை கட்டமைப்போம்!

இந்தியா, உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு என்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. ''எவ்வளவோ குறைபாடுகள் இருந்த போதும், ஆசியா - ஆப்பிரிக்கா மற்றும் தென்னமெரிக்கா அடங்கிய தெற்கு உலகில்வேறு எங்கும் இல்லாதவாறு, கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான காலத்தில் ஜனநாயகத் தேர்தல்கள் தடையில்லாமல், கிரமப்படியும் முறைப்படியும் நடந்துவருகின்றன.''

''சுமார் 65 கோடி மக்கள் வாக்காளர்களாக உள்ள நாடு; சுமார் 40 கோடி மக்கள் வாக்களிக்கின்றனர். ஏறக்குறைய ஒரு கோடி அதிகாரிகளும் ஊழியர்களும் தேர்தல் பணிகளில் ஈடுபடுகின்றனர். பல ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிட்டு மிகப் பெரிய அளவிலான பிரச்சாரங்கள் நடந்து, ஒவ்வொரு முறையும் நாடே இத்தேர்தல் திருவிழாவில் மூழ்கித் திரும்புகிறது. ஜனநாயகத்தின் தொட்டில்களாகக் கருதப்படும்மேலை நாடுகளில் கூட இவ்வளவு பிரம்மாண்டமான தேர்தல்களைக் காண முடியாது.''

— இவையெல்லாம்தான் உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியாவைச் சித்தரிப்பதற்குக் கூறப்படும்காரணங்கள்.

ஆனால், இந்த நாட்டின் மக்கள், இந்தத் தேர்தல்களையும் ஜனநாயக ஆட்சி முறையையும் எந்த அளவுக்கு மதிக்கிறார்கள், இவற்றின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்? இவற்றின் மீது மதிப்பும் மரியாதையும் நம்பிக்கையும் வையுங்கள் என்று குடியரசுத் தலைவர் முதல் எல்லா வகை முக்கியப் புள்ளிகளும் கோருவதோடு தவறாது ஓட்டுப் போடுமாறு வலியுறுத்தி விளம்பரங்களும் செய்கிறார்கள். இது, தேர்தல்கள் மீதும் ஜனநாயக ஆட்சிமுறை மீதும் மக்கள் நம்பிக்கை இழந்து வருவதை அவர்களேஒப்புக்கொள்வதாகும்.

நாடாளுமன்ற - சட்டமன்றத் தேர்தல்கள் மட்டுமல்ல, உள்ளூராட்சித் தேர்தல்கள் வரை எல்லாவற்றின் மீதும் மக்கள்பெருமளவில் நம்பிக்கை இழப்பதற்கான காரணங்கள் அனைவரும் அறிந்தவைதாம்; ஒன்றும் ஆராய்ச்சிசெய்துகண்டுபிடிக்க வேண்டியவாறு மறைபொருளாய் அவைஇருக்கவில்லை.

ஓட்டுக்கட்சி அரசியல் மற்றும் அரசியல்வாதிகள்மீது மட்டும் மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. நாடாளுமன்ற ஆட்சி முறையின் பிற அங்கங்களான அதிகாரவர்க்கம், போலீசு, இராணுவம் - துணை இராணுவம், நீதித்துறை, தேர்தல் ஆணையம், மதச் சிறுபான்மையினருக்கான ஆணையம், தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்கள் மற்றும் பெண்களுக்கான ஆணையங்கள், மனித உரிமை ஆணையம் போன்ற அனைத்தின் மீதும் பரந்துபட்ட மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இப்படி நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் அமைப்பின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது என்று ஒரு கட்டம்வரை எச்சரித்துத் தடுக்கும் முயற்சியில் ஜனநாயகவாதிகள் ஈடுபட்டிருந்தனர். இருந்தாலும் ஆட்சி - அரசு அமைப்பின் சீர்குலைவுகள் தொடர்ந்து, அதன் மீது மக்கள் நம்பிக்கை இழப்பதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இதனால் அடுத்த கட்டமாக ஒட்டுமொத்த அரசியல் அமைப்பின் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில் அதைப் புதுப்பிப்பதற்கான பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்பட்டன; முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இருந்தாலும் அரசியல் சீர்குலைவும், வாக்களிப்போர் எண்ணிக்கையின் வீழ்ச்சியும், பல்வேறு காரணங்களால் மக்கள் தன்னெழுச்சியாகத் தேர்தல்களைப் புறக்கணிப்பதும் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஜெயலலிதா, நரேந்திர மோடி, பால்தாக்கரே, அத்வானி போன்ற பாசிஸ்டுகளின் அதிகாரத்தின் கீழ் ஆட்சியும் தேர்தல்களும் கூட பாசிசமயமாக்கப்படுகின்றன. இதனால் எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகளே தேர்தல்களைப் புறக்கணிக்கும்படி நிர்பந்திக்கப் படுகின்றன. இந்த நிலைக்குத் தீர்வு என்ன, மாற்று என்ன என்று முன்வைக்காது மீண்டும் தற்போதைய தேர்தல் - ஆட்சிமுறை என்ற சுழல் வட்டத்துக்குள்ளேயே அவை உழல்கின்றன.

ஆனால், மார்க்சிய - லெனினியக் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் மட்டுமே கடந்த பல ஆண்டுகளாக இந்த நாடாளுமன்ற ஜனநாயகத்தின் போலித்தனத்தையும் அதன் சீரழிவுப் போக்கையும் அம்பலப்படுத்தி தேர்தல்களைப் புறக்கணிக்கும்படி கோரி வருகின்றனர்.

உள்ளூர் அரசியல் ரௌடிகள், மார்க்சிய - லெனினிய இயக்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று உறுதி பூண்டுள்ள இந்துத்துவ வெறிபிடித்த குண்டர்கள் மற்றும் போலீசு அதிகாரிகள் மட்டுமே இந்தத் தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தைக் கடுமையாக எதிர்த்து நேரடியாகவே மோதல் - தாக்குதலில் ஈடுபடுகின்றனர். செய்தி ஊடக நிர்வாகம், அரசியல் கட்சித்தலைமை, ஏகாதிபத்தியசம்பளப்பட்டியலில் உள்ள புத்திஜீவிகள் போன்றவர்கள் - தேசபக்தி, நாட்டுப்பற்று, ஜனநாயகம் பற்றிய போலித்தனமான, மிகவும் மேலோட்டமான அறிவே கொண்டுள்ள விசுவாசமான அறிவுஜீவிகள் மட்டுமே தேர்தல் புறக்கணிப்பை எதிர்த்த வாதங்களை அடுக்குகின்றனர்.

மற்றபடி ஓட்டுக் கட்சிகளின் பரவலான அணிகள் உட்பட ஓரளவு அரசியல் நேர்மையுடைய பலர் தேர்தல் புறக்கணிப்புக்காக கம்யூனிஸ்டு புரட்சியாளர்கள் முன்வைக்கும் கருத்துக்களை மறுப்பதில்லை. ஆனாலும், தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் முழு வெற்றி ஈட்டிவிட்டதாகக் கூற முடியாது. தேர்தல் புறக்கணிப்புக்காகக் கம்யூனிசப் புரட்சியாளர்கள் கூறும் காரணங்களை பெருமளவிலான மக்கள் வரவேற்றாலும் அவர்களில் கணிசமான பேர் மீண்டும் வாக்களிக்கப் போய் விடுகின்றனர்.

இதன்பொருள், தேர்தல் ஜனநாயகத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கை தொடர்கிறது என்பதல்ல. அன்றாடக் கூலி வேலையை நம்பிவாழும் ஏழை எளிய மக்களுக்கு வேலை கிடைத்து, அதன்மூலம் வருவாய் கிடைப்பதே அரிதாக உள்ளது. பல்வேறு வகையான இலவசங்களோடு குறைந்தபட்சக் கூலிக்கு மேலாக வாக்கு விலைபேசப்படும் போது அந்த வலையில் விழுந்து விடும் பலவீனமுடையவர்களாக அவர்கள் உள்ளனர். தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் நடத்திவரும் புரட்சிகர இயக்கங்கள் தேர்தல் நாளன்று ஊக்கமான மக்கள்திரள் செயல்களில் ஈடுபடாது ஒதுங்கியிருக்கின்றனர் அல்லது தனிநபர் சாகச நடவடிக்கைகளில் இறங்கி வாக்காளர்கள் மீதே அரசு பயங்கரவாதத் தாக்குதல்கள்

www.padippakam.com

கட்டவிழ்த்துவிட வாய்ப்பு ஏற்படுத்தித் தருகிறார்கள். மேலும் மார்க்சிய - லெனினியப் புரட்சிகர அமைப்புகள் தேர்தல் புறக்கணிப்பு முழக்கத்தை முன்வைக்கும்போது தார்மீகரீதியில் அதை ஆதரிக்கும் அதேசமயம், மக்கள் எழுப்பும் கேள்விகளுக்கு முழுமையான, செயல்பூர்வமான மாற்று வழிமுறைகளை மேற்கொண்டு இயக்கம் முன்னெடுத்துச் செல்லப்படுவதில்லை.

''நாம் தேர்தலைப் புறக்கணித்தாலும் தேர்தலே நின்றுவிடாது; அசாமிலும் காசுமீரிலும் நடந்ததைப் போல 2 அல்லது 3 சதவீதத்தினர் ஓட்டுப் போட்டாலும் அதைவைத்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு யாராவது பதவிக்கு வருவதைத் தடுக்க முடியாது. நாம் ஓட்டுப் போடாவிட்டால் யாராவது கள்ள ஓட்டுப் போட்டுவிடுவார்கள்'' என்பது போன்ற கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இப்படியெல்லாம் நடக்கும் ஒரு அமைப்பில் ஓட்டுப் போடுவதன் மூலம் இத்தகைய மோசடிகளுக்கு நாம் ஏன் உடந்தையாக இருக்கவேண்டும் என்கிற எதிர்க்கேள்வி, ஒரு எதிர்மறையிலான பதிலாகவே இருக்கிறது.



**இந்திய துணை இராணுவம்: அந்நியப் படையெடுப்புக்கு எதிராக அல்ல. வாக்குச்சாவடியை கைப்பற்றும் முயற்சிக்கு எதிராக. பீகார் மாநிலம் சாப்ரா தொகுதியில் முசேப்பூர் கிராமத்தில்.**

தேர்தல் புறக்கணிப்பை நேர்மறையாகவும், செயலூக்கமிக்கதாகவும் எப்படி மாற்றுவது என்கிற கேள்விக்கு புரட்சிகர அமைப்புகள் பதில் சொல்லியே தீரவேண்டும். தேர்தல்களைப் புறக்கணித்துவிட்டு நாம் என்ன செய்வது என்ற கேள்விக்கு பொறுப்பான பதில், மாற்று அரசியல் வழிமுறையை முன்வைத்துப் போராடுவதில்தான் இருக்கிறது.

மார்க்சிய - லெனினியக் கம்யூனிஸ்டுப் புரட்சியாளர் வெறுப்பினாலோ, விரக்தியினாலோ வெறும் எதிர்ப்புக்காகவோ அல்லது வெற்று வன்முறை, பரட்சி, தீவிரவாதம் என்பதற்காகவோ தேர்தல் புறக்கணிப்பு முழக்கத்தையும் நடைமுறையையும் கடைப்பிடிப்பதில்லை. ஆளும் கட்சிகளும் ஆளும் வர்க்கங்களும் அவர்களின் செய்தி ஊடகங்களும்தான் அப்படி ஒரு அவதூறைப் புரட்சியாளர்களுக்கு எதிராகப் பரப்புகின்றன.

அதற்கு மாறாக, ஒரு ஆக்கப்பூர்வமான, திட்டமிட்ட மாற்று அரசியல் அமைப்பையும், அதை அடைவதற்கான வழிமுறையையும் வைத்துக் கொண்டுதான் தேர்தல்களைப் புறக்கணிக்கும்படி அறைகூவி அழைக்கிறார்கள், புரட்சியாளர்கள். அனைத்துத் தரப்புச் செய்திகளையும் விருப்பு வெறுப்பின்றி மக்கள் முன் வைப்பதுதான் தமது புனிதமான கடமை என்று செய்தி ஊடகம் கூறிக் கொள்கிறது. அதற்காகப் பல தனிச்சிறப்பான சலுகைகளையும், உரிமைகளையும் கூட அனுபவித்து வருகிறது. ஆனால் அது, கம்யூனிச புரட்சியாளர்கள் இன்றைய அரசு அமைப்பின் மீது வைக்கும் விமர்சனங்கள், தேர்தல் புறக்கணிப்பு உட்பட தமது அரசியல் நிலைப்பாடுகள் குறித்து தரும் விளக்கங்கள், மாற்று அரசியல் அமைப்புக்காக அவர்கள் நடத்தும் போராட்டங்கள் - எல்லாவற்றையும் இருட்டடிப்பு செய்கிறது.

ஆரம்பப் பள்ளியிலிருந்து கல்லூரிகள் முடிய பயிற்றுவிக்கப்படும் கல்வி, மக்கள் திரள் செய்தி ஊடகம் தரும் தகவல், பெருந்திரள் பொழுதுபோக்கு சாதனங்கள் - இவையெல்லாமே தற்போது நிலவிவரும் அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிறுவனங்களுக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் விசுவாசமாகவே கருத்துருவாக்கம் செய்கின்றன. நாட்டின் அறிவு ஜீவிகள் உட்பட அனைவருமே நிலவும் நிறுவனங்களை அடியொற்றி, அவற்றைப் பாதுகாத்துப் பராமரிக்கும் வகையிலேயே பயிற்றுவிக்கப்படுகிறார்கள். என்னதான் தேக்கத்தையும் நெருக்கடியையும் எதிர்கொண்ட போதும் இவற்றுக்கு மாறாக, எதிராக, முரணாக, சிந்திக்க முடியாத அறிவு மலட்டுத்தனம் உருவாக்கப்படுகிறது.

உள்ளுக்குள்ளேயே சிந்தித்து, குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதுதான் புத்திசாலித்தனமானது; அதிகாரபூர்வமாகக் கொண்டு வரப்படும் மாற்றங்கள், சீர்திருத்தங்களை மட்டுமே ஏற்றுக் கொள்ளவேண்டும்; தற்போதைய சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுக் கட்டமைப்புகளுக்கு வெளியே எப்படிப்பட்ட அமைப்புகள் சரியாகவும் மக்களுக்கானதாகவும் இருக்கும் என்று தேடுவதும், வாதங்களைக் கிளப்புவதும் தேச துரோகம், சமூகவிரோதம், தீவிரவாதம் என்று முத்திரை குத்தி ஒடுக்கப்படுகிறது.

''உலகிலேயே மிகச்சிறந்த நன்கு அனுபவப்பட்ட ஜனநாயக அரசியல் - நிர்வாக அமைப்பு இந்தநாட்டில் தான் இருக்கிறது, முன்னாள் கம்யூனிச நாடுகளே ஏற்றிப் போற்றி, பாடங்கற்றுக் கொள்ளும் அளவுக்கு வலிமை பெற்றதாக உள்ளது'' என்று பீற்றிக் கொள்கிறார்கள். ஆனால் இங்குதற்போதுள்ள அரசியல் - நிர்வாக அமைப்பு ஆங்கிலேய அரசமைப்பை முன்மாதிரியாகக் கொண்டு, ஆங்கிலேயக் காலனியவாதிகளாலேயே, அவர்களுடைய நலன்களுக்காகவே திட்டமிட்டு உருவாக்கப்பட்டதுதான். இந்த அரசு நிர்வாகத்தில் மக்களின் நேரடி, மறைமுகப் பங்கேற்பு எதுவும் கிடையாது; குறிப்பிட்ட சமயங்களில் வாக்குச்சாவடிக்குப் போய் ஓட்டுப் போடுவதைத்தவிர எதுவும் கிடையாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ''பிரதிநிதிகளும்'' ஏற்கெனவே உள்ள அரசியல் நிர்ணய சட்ட வரம்புக்குட்பட்டு சில சட்டத்திருத்தங்களும், பொருளாதாரத் திட்டங்களும் நிறைவேற்றுவதற்கு ஓட்டுப் போடுவதற்கும், ''தங்கள் சார்பில்'' ஆட்சி நிர்வாகத்தை நடத்துவதற்கான பொறுப்பாளர்களை ஆதரிப்பதற்கும் அல்லது எதிர்ப்பதற்கும் மட்டும் உரிமை உடையவர்கள். மற்றபடி இவர்களோ, மக்களோ அன்றாட ஆட்சி நிர்வாகத்தில் தலையிடவோ முடியாது. அப்படித் தலையிட்டால் அரசு நிர்வாகத்தில் குறுக்கீடு செய்ததாகத் தண்டிக்கப்படுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

மக்களாட்சி என்கிற பெயரில் உண்மையில் அன்றாட அரசு நிர்வாகத்தை அதிகார வர்க்கமும் போலீசும், நீதிமன்றமும்தான் நடத்துகின்றன. இவையும்கூட வெறுமனே பொதுமக்கள் நல நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இயங்குவதில்லை. பொது அமைதி காக்கவும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற கிரிமினல் குற்றங்களைத் தடுக்கவும், மீறி நடந்தால் தண்டிப்பதையும் மட்டும் வேலையாகக் கொண்டிருக்கவில்லை. ஆனால், அப்படி ஒரு தோற்றம் தரப்படுகிறது.

இந்த சிவில் நிர்வாகம், அரசு நிர்வாகத்தைப் பராமரிக்க இயலாதபோது, இன்று காசுமீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் நடப்பதைப் போன்று இராணுவமும் துணை இராணுவமும் நேரடியாக நிர்வாகப் பொறுப்பை மேற்கொள்கின்றன. மற்றபடி, இந்த அமைப்புகள் அந்நிய இராணுவத்தலையீடு ஆக்கிரமிப்புக்கு எதிராக நாட்டையும், மக்களையும் காப்பதற்கான ''புனிதப் பணி''க்காகவே இருப்பதைப் போன்ற இன்னொரு தோற்றம் உருவாக்கப்படுகிறது.

ஆனால், மேற்கண்ட அரசு நிர்வாக அமைப்புமுழுவதும் நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் ஐந்து சதவீதமானவர்கள் கூட இல்லாத ஒரு சிறுபான்மையின் நலனுக்காகவே செயல்பட்டு வருகிறது. நிலத்தையும் தொழிற்சாலைகளையும், சேவைத்துறை சாதனங்களையும் ஏகபோகமாக்கிக் கொண்டு உற்பத்தியையும் சந்தையையும் தமது முழு ஆதிக்கத்தில் வைத்திருக்கும் இந்தச் சிறுபான்மையினர் அந்நிய ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து நமது நாட்டையும் மக்களையும் அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதில் அவர்களுக்குச் சேவைசெய்வதுதான் இன்றைய அரசு நிர்வாக அமைப்பின் கடமையும் பொறுப்புமாக உள்ளது.

தற்போதைய இந்த அரசு நிர்வாக அமைப்பு பெரும்பான்மையினரான நமது நாட்டின் உழைக்கும் மக்களுக்குச் சேவை செய்வதாக மாறாது, மாற்றவும் முடியாது. இதன் ஊழியர்களும் அதிகாரிகளும், இதன் கட்டுமானமும் அதற்குரிய கருத்தும் பயிற்சியும் தன்மையும் கொண்டவர்கள் அல்ல.

ஆகவே, மக்கள் வெறுமனே தேர்தல்களைப் புறக்கணித்தால் மட்டும் போதாது. தற்போதைய அரசு நிர்வாக அமைப்பைத் தாக்கித் தகர்த்து கலைத்துவிட்டு மக்களே நேரடியாக ஆட்சி நிர்வாக அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும். இப்படித்தான் உண்மையான மக்களாட்சியை நிறுவ முடியும். வேறு வழியேதும் கிடையாது என்று உலக அனுபவங்கள் காட்டுகின்றன.



1948 தெலுங்கானாப் பேரெழுச்சியின்போது அமைக்கப்பட்ட பெண்கள் கொரில்லாப் படை.

தற்போதைய அரசு நிர்வாக அமைப்பானது உண்மையில் ஒரு சர்வாதிகார அமைப்பாகவே உள்ளது. இது தனது அதிகாரத்தை வன்முறையின் மூலம் தான் செலுத்தி வருகிறது. வெறும் காகிதம், பேனாவால் உத்திரவு போட்டுக் காரியமாற்றிவிடுவதில்லை. அதற்காகத்தான் அதிகார வர்க்கமும் நீதித்துறையும் கூடவே போலீசு, துணை இராணுவம் - இராணும் சிறைச்சாலை ஆகிய நவீன ஆயுதந்தாங்கிய வன்முறை அமைப்பையும் பெற்றிருக்கிறது. பரந்துபட்ட உழைக்கும் மக்கள் தமது அரசியல் பொருளாதார கோரிக்கைகளுக்காக அரசுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் எதிராக உறுதியாகப் போராடும் பொழுதெல்லாம் இந்த வன்முறை நிறுவனங்களை எதிர்கொள்வதை அறியலாம்.

நாட்டின் மக்கள் மீதும், மக்களுக்கு எதிராகவும் இவ்வாறான சர்வாதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான உரிமையை இந்த அரசு நிர்வாக அமைப்புக்கு வழங்கியது யார்? நடப்பிலுள்ள சட்டதிட்டங்கள் தாம் தமக்கு அனைத்து அதிகாரங்களையும் வழங்கியிருப்பதாகக் கூறிக் கொள்கிறார்கள்.

ஆனால், மக்கள் மீது, மக்களுக்கு எதிரான சர்வாதிகாரம் செலுத்தும் இந்த சட்டதிட்டங்கள் எவையும் மக்களின் ஒப்புதலோடு, மக்கள் பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்டவை அல்ல. மேலிருந்து, மக்களின் சம்மதமின்றியே திணிக்கப்பட்டவை. அனைத்து மக்களுக்கும் வாக்குரிமை வழங்கப்படாமல் சொத்துடைமையுள்ள வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடைக்கால அரசின் உறுப்பினர்களாக இருந்தவர்களும், சமஸ்தான அரசர்களாலும் ஆங்கிலேய காலனிய ஆட்சியாளர்களாலும் நியமிக்கப்பட்டவர்களும் உறுப்பினர்களாக இருந்த அரசியல் நிர்ணய சபையால் எழுதி நிறைவேற்றப்பட்டதுதான் தற்போதைய அரசியல் நிர்ணயச் சட்டம்.

இதுவும் 1935-இல் ஆங்கிலேயக் காலனிய ஆட்சியாளர்கள் கொண்டுவந்த அரசியல் சீர்திருத்தச் சட்டத்தின் மறுமதிப்புதான். இதோடு இந்திய மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதற்காக காலனியவாதிகள் அமலாக்கிவந்த கிரிமினல் தண்டனைச் சட்டம், சிவில், தொழிற்தகராறு, கம்பெனி மற்றும் வரிவிதிப்பு சட்டங்களும் அப்படியே இணைக்கப்பட்டன. இவ்வாறான சட்டதிட்டத் தொகுப்பும்கூட ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் மக்களின் ஒப்புதலைப் பெறவில்லை. வெறுமனே ஒரு பிரகடனத்தின் மூலம் மக்கள் மீது திணிக்கப்பட்டது. இது மக்கள் விரோதமானதாக இருப்பதில் வியப்பு ஏதுமில்லை.

ஆகவே, தற்போதைய மக்கள் விரோத, போலி ஜனநாயக அரசியல் சட்டதிட்டத்தையும், அதை முன் வைத்து சர்வாதிகார ஆளும் உரிமையை நிலைநாட்டியுள்ள தற்போதைய அரசு நிர்வாக அமைப்பையும் மதிக்கவோ அவற்றுக்குக் கட்டுப்பட, கீழ்படியவோ மாட்டோம் என்கிற அரசியல் வேலை நிறுத்தத்தில் குதிக்க வேண்டும். இப்படிப்பட்ட அரசியல் வேலை நிறுத்தம், தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தின் தொடர்ச்



படிப்பகம்

சியாகவும் அடுத்த கட்டமாகவும் அமையும். தகுந்த தற்காப்பு ஏற்பாடுகளின்றி அரசியல்வேலைநிறுத்தம்வெற்றிபெற முடியாது.

ஏனென்றால், அரசியல் வேலை நிறுத்தம்என்பதுஒருதொழிற்சாலையில் உற்பத்தியைத் தொடர மாட்டோம் என்று அறிவித்து வேலை நிறுத்தம் செய்வதைப்போன்றதன்று. தற்போதைய அரசின்சட்டத்திட்டத்திற்கும், அரசுநிர்வாக அமைப்புக்கும் கட்டுப்படவோ, கீழ்படியவோ மறுப்பதாகும். அதுவும் தனிநபராகவோ, குழுவாகவோ அல்லாது மக்கள் திரள் நடவடிக்கையாக அப்படிச் செய்யும்போது அந்தச் செயல் மிகவும் விபரீதமானதாகவும், மற்றபிற கிரிமினல் குற்றங்களை விட மிகக் கடுமையான சமூகவிரோத - அரசு விரோத கிரிமினல் குற்றமாகவும் அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்கி ஒடுக்க வேண்டியதாகவும் ஆட்சியாளர்களால் கருதப்படும்.

அரசியல் வேலை நிறுத்தம் என்பது தற்போதைய அரசு நிர்வாக அமைப்புக்கும், அதன் சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்படவும் கீழ்படியவும் மறுப்பது என்பது மட்டுமல்லாமல், அவைசெயல்படுத்தப் படுவதை தடுப்பதும், முடக்குவதுமாக முன்னேறவும் வேண்டும். அவற்றுக்கு மாற்றாக மக்கள் தாமே ஆளும் சர்வாதிகார உரிமையைக் கையிலெடுக்கவும் வேண்டும். அரசியல் வேலை நிறுத்தத்தை ஒரு மாபெரும் மக்கள் திரள் போராட்டமாகவும் பேரெழுச்சியாகவும்வளர்த்தெடுப்பதன்மூலம்தான்இது சாத்தியமாகும். மக்கள் வாழும் பகுதிகள், வட்டாரங்களுக்குள் நுழையும் தற்போதைய அரசு நிர்வாக எந்திரத்தை அடித்து விரட்டுவது; தாக்கினால் எதிர்த்துத்தாக்குவது, பெரும்பள்ளங்கள்வெட்டியும், மரங்களையும், கற்பாறைகளையும் அடுக்கித் தடுப்புச் சுவர்களை எழுப்புவது என்றுபல்வேறு வழிகளைப் பயன்படுத்தி எதிரிகளை நகரவிடாமல் செயல்பட விடாமல் முடக்குவது போன்ற செயல்களில்இறங்கவேண்டும்.



1948 தெலுங்கானாப் பேரெழுச்சியின்போது 12-18 மாதங்களாக புரட்சிகர அரசு நிர்வாகத்தை நிறுவியிருந்த விவசாயிகள் கமிட்டி: மக்கள் சர்வாதிகார மன்றம்.

இத்தகைய செயல்களின் இறுதி நோக்கம் தற்போதைய அரசு நிர்வாக அமைப்புக்கு இணையாகவும் போட்டியாகவும் மாற்றாகவும் புதியதொரு மக்கள்அதிகாரஅரசுமையத்தைநிறுவுவதாகும். நமது நாடு ஒரே சீரான அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சியும் தன்மையும் கொண்டதாக இல்லை. எனவே நாடுதழுவியஒரேபுரட்சிகரமக்கள்அதிகார அரசு மையத்தை ஒரே சமயத்தில் நிறுவுவதுசாத்தியமில்லை.ஏனென்றால் புரட்சிகர மக்கள் இயக்கங்களின் வலுவாகவும், தற்போதைய அரசு நிர்ணய அமைப்புகள் பலவீனமாகவும் உள்ள கிராமங்கள், பகுதிகள், வட்டாரங்களிலெல்லாம் புரட்சிகர மக்கள் அதிகார அரசு மையங்களாக மக்கள் சர்வாதிகார மன்றங்களைநிறுவவேண்டும்.

தற்போதைய அரசுநிர்வாக அமைப்புக்கு எதிரான அரசியல் வேலை நிறுத்தங்களிலும், அரசியல் போராட்டங்கள், பேரெழுச்சிகளில் உறுதியாகப் பங்கேற்றுத் தலைமைதாங்கும் செயல்வீரர்கள் தாம் மக்கள் சர்வாதிகார மன்றங்களின் உறுப்பினர்களாகவும், பொறுப்பாளர்களாக இருப்பார்கள். இந்த மக்கள் சர்வாதிகார மன்றம் தன்னைத்தானே தற்காத்துக் கொள்ளவும் தனது சட்டதிட்டங்களை அமலாக்குவதற்கும் சொந்த ஆயுதந்தாங்கிய குழுக்களைப் பெற்றிருக்க வேண்டும். அரசியல் வேலை நிறுத்தம், மக்கள் பேரெழுச்சி, தற்போதைய அரசு நிர்வாகத்தைத்தாக்கி முடக்குவது, தகர்ப்பது ஆகிய போராட்டத்தில் போர்க்குணத்தோடு முன் நிற்கும் செயல்வீரர்களை கொண்டு மக்கள் போலீசு, துணை இராணுவ அமைப்புகளும் கட்டப்படவேண்டும்.

மக்கள் சர்வாதிகார மன்றம் மற்றும் மக்கள் போர்ப்படை ஆகிய அமைப்புகளைப் புரட்சிகர எழுச்சியினூடாக நிறுவுவது, அதன்மூலம் மக்கள்அதிகாரத்தைக் கைப்பற்றுவது முற்றிலும் புதிய முயற்சி அல்ல. பல்வேறு சந்தர்ப்பங்களிலும், பல்வேறு நாடுகளிலும் இப்படிப்பட்ட முயற்சிகள் நடந்து வெற்றியும் பெற்றுள்ளன. பிரெஞ்சு சர்வாதிகார மன்னனுக்கு எதிராக 1871-லும், ரஷ்யாவின் கொடுங்கோலன் ஜாருக்கு எதிராக, 1905 மற்றும் 1917-ஆம் ஆண்டுகளிலும், சீனாவில் - கோமிங்டாங் பாசிச சர்வாதிகாரத்திற்கு எதிராக 1927-லும் நமது நாட்டிலேயே ஆங்கிலேய காலனி ஆட்சிக்கு எதிராக 1942 - இல் ஷோலாப்பூரிலும் ஐதராபாத் நிஜாமின் பிரபுத்துவ ஆட்சிக்கு எதிராக தெலுங்கானாவிலும் 1947-48-லும் இன்னும் உலகின் பல நாடுகளிலும் மக்களே அதிகாரத்தைக் கைப்பற்றி தமது சர்வாதிகார மையங்களை நிறுவிக் கொண்ட சம்பவங்கள்நடந்துள்ளன.

கம்யூன்கள், சோவியத்துக்கள், உழவர் புரட்சிக் கமிட்டிகள் என்று வெவ்வேறு பெயர்களில் அமைந்த மக்கள் சர்வாதிகார மையங்கள் சில இடங்களில் ஒடுக்கப்பட்டாலும், ரசியா, சீனா, வியத்நாம் போன்ற நாடுகளில் வெற்றி பெற்று நாடு தழுவிய அதிகாரத்தைக்கைப்பற்றுவதாக வளர்ந்த சான்றுகளும் உள்ளன. இத்தகைய மக்கள் சர்வாதிகார மையங்கள் நாடு முழுவதற்குமான முன்மாதிரிகளாக அமைந்து நாடு தழுவிய புரட்சிப் பேரெழுச்சிக்கு வழிவகுக்கின்றன. இதன் தொடர்ச்சியாகவே தற்போதைய அரசு நிர்வாக அமைப்பு வீழ்த்தப்பட்டு புதிய மக்கள் ஜனநாயக அரசு அமைப்பு நிறுவப்படும்.

● ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

# மறுகாலனியாதிக்கத்தில் இந்தியா: தேவை இன்னுமொரு விடுதலைப் போராட்டம்

நாடாளுமன்றத் தேர்தலையொட்டி பா.ஜ.க. வெளியிட்டுள்ள ''தொலைநோக்கு 2004'' என்ற ஆவணத்தில், ''2020-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வல்லரசாக்கி விடுவதாக'' வாக்குறுதி கொடுத்திருக்கிறது.

''கேட்பவன் கேணப்பயலா இருந்தால், கேழ்வரகில் நெய் வடிகிறது என்பார்கள்'' என்றொரு கிராமத்துப் பழமொழி உண்டு. குடிக்கத் தண்ணீர் கூட கிடைக்காமல் அவதிப்படும் மக்களைக் கொண்ட ஒரு நாடு, 2020-இல் வல்லரசாகிவிடும் என்றால், இந்தப் பழமொழியைத் தவிர வேறெது நினைவுக்கு வரும்?

''இந்தியா ஒளிர்கிறது'' என்கிறது ஆளுங்கும்பல். அவர்கள் எடுத்துப் போடும் கார் - செல்போன்களின் விற்பனை; அந்நியச் செலாவணிக் கையிருப்பு பற்றிய புள்ளி விவரங்களை ஒதுக்கிவிட்டு, மக்களின் வாழ்க்கையைப் பாருங்கள். அதில் இருந்து ''இந்தியா ஒளிர்கிறதா?'' இல்லை, ''இந்தியா ஒழிகிறதா?'' என்பதை முடிவுசெய்யுங்கள்.

- கடந்த பத்தே ஆண்டுகளில் நாடெங்கிலும் 16,000 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போய்விட்டனர்.

- வங்கப் பஞ்சத்தின் பொழுது ஒரு இந்தியக் குடிமகனுக்கு சராசரியாக ஒரு ஆண்டுக்கு எவ்வளவு உணவுதானியம் கிடைத்ததோ, அதே அளவு உணவு தானியம்தான் இப்பொழுது கிடைப்பதாக வல்லுநர்கள் கூறுகிறார்கள். அதாவது, நாடு பட்டினிச் சாவை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

- வேலையில்லாப் பட்டாளத்தின் எண்ணிக்கை 4 கோடியைத் தாண்டி விட்டது.

- தாராள இறக்குமதியின் காரணமாக தமிழகத்தில் மட்டும் 4 இலட்சம் சிறுதொழில்கள் மூடப்பட்டுவிட்டன.

- இப்படி இந்த அவலங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவையனைத்தும் தனியார்மயம் - தாராளமயத்தின் கோரமான விளைவுகள்.

ஆனால், ஓட்டுக்கட்சிகளோ தனியார்மயம் - தாராளமயத்தை, இந்தியாவை அமெரிக்காவைப் போல பணக்கார நாடாக்குவதற்கான பொருளாதாரக் கொள்கை எனக் கூறுகின்றன. இந்தக் கொள்கைகளை இன்னும் தீவிரமாக நடைமுறைப்படுத்தினால், இந்தியா வல்லரசாகி விடும் என்கிறது பா.ஜ.க.

முன்னாள் உலகப் போலீசுக்காரனான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதமர் டோனி பிளேயரின் ஆலோசகர் ராபர்ட் ஹூப்பர், இந்தப் பொருளாதாரக் கொள்கையை, இந்தியாவை மீண்டும் அடிமை (காலனி) நாடாக்குவதற்கான கொள்கை என்கிறார்.

''பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய காலனியாதிக்கத்தின் தேவையும், அதற்கான வாய்ப்பும் இப்போதும் - எப்போதும் இருந்து வருகிறது. இப்போது புதுவகையான காலனியாதிக்கம் தேவைப்படுகிறது. இந்தப் புதுவகை காலனியாதிக்க உலகை நிர்வகிக்கவும், செயல்படுத்தவும் உலகளாவிய அமைப்புகளான உலக வங்கி, ஐ.எம்.எஃப் தேவைப்படுகிறது'' - என வெளிப்படையாகவே ராபர்ட் ஹூப்பர் கூறியிருக்கிறார்.

ராபர்ட் ஹூப்பரின் இந்தப் பேச்சை காலனியாதிக்க திமிர் பிடித்த அதிகாரியின் உளறல் என்றோ, மிகைப்படுத்தப்பட்ட கூற்று என்றோ ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. ஏனென்றால், நம் நாட்டு ஆட்சியாளர்களே ''உலக வங்கியின் கட்டளைகளைதான் நாங்கள் நிறைவேற்றுகிறோம்'' எனப் பலமுறை ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கிறார்கள்.

பா.ஜ.க. கூறுகிறபடி, இந்தக் கொள்கையை தீவிரமாக நடைமுறைப்படுத்தினால், 2020-ஆம் ஆண்டில் இந்தியா வல்லரசாகாது; அமெரிக்காவின் மறு காலனியாகிவிடும்.

தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்த்துப் போராடுபவர்களில், நக்சல்பாரி புரட்சியாளர்கள் தவிர, மற்ற பிரிவினர் தனியார்மயம் - தாராளமயத்தை மக்களை வாட்டி வதைக்கும் பொருளாதாரக் கொள்கை எனக் குறுக்கிதான் பார்க்கின்றனர். ஓட்டுக் கட்சிகள் மனது வைத்தால் அந்த நாசகாரப் பொருளாதாரக்கொள்கையை ஒதுக்கித்தள்ளிவிடலாம் என்றும் நம்புகின்றனர்.

''ஆகஸ்டு 15, 1947 அன்றே வெள்ளைக்காரன் வெளியேறிப் போய் விட்டான்; அதன்பிறகு, இந்தியாவை இந்தியர்கள்தான் ஆண்டு வருகின்றனர். அதற்காகத்தான் தேர்தல் நடைபெறுகின்றன. சாதாரண கொடுக்கல் - வாங்கலிலேயே இலாப-நட்டம் இருக்கும்பொழுது, சர்வதேச வர்த்தகமும் அப்படி இப்படிதான் இருக்கும். கடன் கொடுக்கும் உலகவங்கி, சிலநிபந்தனைகளைவிதிக்கிறது. அவ்வளவுதான்'' என ஓட்டுக் கட்சிகளும், பத்திரிகைகளும் தர்க்க நியாயங்களை அடுக்கி, பொது மக்களை மூளைச் சலவை செய்து, நாடு மறுகாலனியாக்கப்படுவதைப் பூசி மெழுகிவிடுகின்றன.

வெள்ளைக்காரன் இந்தியாவை ஆண்டபொழுது கூட, நாடாளுமன்றம் இருந்தது; தேர்தல்கள் நடந்தன. இந்தியர்கள் அமைச்சர்களாகக்கூட இருந்தார்கள். அன்று நாடாளுமன்றத்திற்கு மேலே வெள்ளைக்கார துரை இருந்ததைப்போல, இன்று உலகவங்கி இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், நாடாளுமன்றம், சட்டமன்றம், நீதிமன்றம் என்ற 'சுதந்திர' இந்தியாவின் அதிகார பீடங்கள் அனைத்துமே, நாட்டை மறுகாலனியாக்கும் வேலையைச் சட்டபூர்வமாகவே செய்கின்றன. கத்தியின்றி, ரத்தமின்றிக் கிடைத்ததாகச் சொல்லப்பட்ட 'சுதந்திரம்', பீரங்கி குண்டுகள் இன்றி, வான்வழித் தாக்குதல்கள் இன்றி பறிபோகிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த 200 ஆண்டு கால சுதந்திரப் போராட்ட வரலாறு இந்தியாவிற்கு உண்டு. அப்படியிருக்கையில், குழந்தையின் கையில் இருந்து மிட்டாயைத் தட்டிப் பறிப்பது போல, பெற்ற சுதந்திரத்தையும், இறையாண்மையையும் தட்டிப் பறித்துவிட முடியுமா என்ற தார்மீக கோபம்கூடப் பலருக்கு வரலாம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த சுதந்திரப் போராட்ட வரலாறு எந்தளவிற்கு உண்மையானதோ,


படிப்பகம்

www.padippakam.com

அந்தளவிற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் துரத்தியடித்துவிட்டு இந்தியாவின் சுதந்திரம் பெறப்படவில்லை என்பதும் உண்மையானது. கடைச் சரக்கை போலத்தான் சுதந்திரம் கைமாற்றித் தரப்பட்டது.


**காலனி இந்தியா, அரைக்காலனியானது**

இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஏகாதிபத்திய முகாம் போரால் பாதிக்கப்பட்டு, மிகவும் பலவீனமடைந்துஇருந்தது; இந்தநிலைமையில் ஏகாதிபத்திய முகாம் தனது காலனிய பிரதேசங்களை முன்பு போல அடக்கி ஒடுக்க இயலாதபடி பலம் இழந்து நின்றன.

இன்னொருபுறம், பாசிச இட்லரை வெற்றிகரமாக முறியடித்து கம்யூனிஸ்டு கட்சித் தலைமையில் சோவியத் மக்கள் காட்டிய தீரம்; உலகெங்கும் கம்யூனிஸ்டுகள் பாசிசத்தை எதிர்ப்பதில் ஆற்றிய சிறப்பான முன்னணி பாத்திரம்; ஹங்கேரி, போலந்து, செக். போன்ற புதிய சோசலிச நாடுகளின் தோற்றம்; சீனா, கொரியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் மாபெரும் முன்னேற்றம் ஆகியவை உலகெங்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, கம்யூனிச ஆதரவுஎழுச்சியைத்தோற்றுவித்தன. ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலை இயக்கங்களின் எழுச்சி என்றுமில்லாத அளவு கொழுந்துவிட்டெரிந்தது.

இந்தச் சூழ்நிலையில் நேரடிக் காலனியாதிக்க வடிவத்தை அப்படியே தொடர்ந்தால், புரட்சிகரமான தேசிய விடுதலை இயக்கங்கள் தங்களது காலனியாதிக்கத்தைப் பலாத்காரமாகத் தூக்கியெறிந்துவிடும் என்பதை ஏகாதிபத்தியங்கள் தெள்ளத் தெளிவாக உணர்ந்து இருந்தன.

சுதந்திரம் வழங்குவது என்ற பெயரில், தங்களது அடிவருடிகளிடம் அரசியல் அதிகாரத்தை மாற்றிக் கொடுத்து விட்டு பின்வாங்கிக் கொள்வது; தங்களது மூலதனம் தொழிற்சாலைகள், சொத்துக்களுக்கு எவ்விதக் குந்தகமும் ஏற்படாத வகையில் சட்டபூர்வ பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வது; இதன் மூலம் முன்னாள் காலனிய நாடுகளை அரைக்காலனிய நாடாகவோ (பல ஏகாதிபத்தியங்களின் மறைமுக வேட்டைக்காடு), நவீன காலனி நாடாகவோ (ஒரேயொரு ஏகாதிபத்தியத்தின் மறைமுக வேட்டைக்காடு) மாற்றித் தங்களது அரசியல் பொருளாதார, இராணுவ ஆதிக்கத்தை மறைமுக வடிவில் தக்க வைத்துக் கொண்டனர். இந்த அரைக்



ஆகஸ்டு 15, 1947 அன்று இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்கும் நேரு: போலி சுதந்திரம்.

காலனிய, நவ காலனிய சுரண்டலை தக்கவைக்கவும், விரிவுபடுத்தவும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்ற இரு நிறுவனங்களை அமெரிக்கா தலைமையில் அமைந்த ஏகாதிபத்திய முகாம் உருவாக்கியது.

இந்தியாவில் 1947-இல் நடந்த அதிகார மாற்றம் நாட்டின் விடுதலையை குறிக்கவில்லை. மாறாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனி நாடாக இருந்த இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட மற்ற பிற ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்திற்கு ஏற்ற அரைக் காலனி நாடாகமாறியது.

நாடாளுமன்றம், அனைவருக்கும் வாக்குரிமை; அணி சேராமை; பஞ்சசீலக்கொள்கைகளுக்கு ஆதரவளித்தது; பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கியது; வங்கி, காப்பீடு, மற்றும் பெட்ரோலியத் தொழில்களைத் தேசியமயப்படுத்தியது - ஆகிய இவை அனைத்தும் இப்போலி சுதந்திரத்தின் மோசடித்தனத்தை மறைத்துக் கொள்ள முகமூடிகளாய்ப் பயன்படுத்தப்பட்டன.

**மறுகாலனிஆதிக்கத்தைநோக்கி...**

இரண்டாம் உலகப் போரின் பின் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்ட ஏகாதிபத்திய முகாம், 1980-களின் பின் மீண்டும் தாக்குதல் நிலைக்கு வந்தது. மேற்குலக ஏகாதிபத்திய முகாமுக்கு எதிர்முகமாக அமைந்த சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள்; சோசலிசசீனாமுதலாளித்துவப்பாதைக்குத் திரும்பியது; தேசங்கடந்த தொழிற்கழகங்களின் பிரம்மாண்டமான வளர்ச்சி; தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சி; ஏகாதிபத்திய நாடுகளிலும், காலனிய, அரைக்காலனிய நாடுகளிலும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி - இவையனைத்தும் ஏகாதிபத்திய நாடுகள், ஏழை நாடுகளை புதிய வடிவில் மீண்டும் காலனியாக்கும் சதிக்கு வாய்ப்புகளைத்திறந்துவிட்டன.

1980-இல் அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி சர்வதேசநாணய நிதியத்திடம்கடன்வாங்கியதும்; அவரது மகன் ராஜீவ் காந்தி புதிய, புதிய தொழில் கொள்கைகளை அறிவித்ததும், ஏகாதிபத்தியங்கள் அரைக் காலனி இந்தியாவை இன்னும் கூடுதலாகக் கொள்ளையடிப்பதற்குவாய்ப்புகளைத்திறந்துவிட்டன. 1990-இல் மைய அரசின் சேமிப்பில் இருந்த தங்கத்தை அடமானம் வைக்கும் அளவிற்கு இந்தியப் பொருளாதாரம் திவாலானபொழுது, ஏகாதிபத்திய நிறுவனங்கள் இந்தியாவிற்குக்கடன்கொடுக்க மறுத்தன. இதன் மூலம், பொருளாதார சீரமைப்புத் திட்டத்தை ஏற்குமாறு இந்தியாவை நிர்பந்தித்தன. சோவியத் ஏகாதிபத்தியம் இருந்தவரை, அதன்தயவில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புச் சவடால் அடித்துக் கொண்டிருந்த இந்தியா, சோவியத் ரசியா சிதறுண்டு போனபிறகு, வேறு வழியில்லாமல் உலகவங்கியின் பக்கம் சாய்ந்து, நாட்டை மறுகாலனியாக்கும் அத்தியாயத்தைதொடங்கியது.

● அடிமை இந்தியாவில், உள்நாட்டுதொழில்களைக்காப்பாற்ற அந்நியப் பொருள் புறக்கணிப்புப் போராட்டம் நடந்தது; 'சுதந்திர' இந்தியாவோ, அந்நியப் பொருள் இறக்குமதிக்கு இருந்த தடைகளையும், கட்டுப்பாடுகளையும் நீக்கிவிட்டு, உள்நாட்டு விவசாயத்தையும், சிறுதொழிலையும் குழிதோண்டிப் புதைக்கிறது.


படிப்பகம்

● 1920-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் காலனிய அரசு, ''வரவுக்கு ஏற்ற செலவு இருக்க வேண்டும்'' என்ற நிதிக் கொள்கையை அறிவித்தது. அதைத்தான் இன்று உலக வங்கி, ''பட்ஜெட்டில் விழும் நிதிப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துங்கள்'' என்று உத்தரவாகப் போடுகிறது.

● ''எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி அந்நிய மூலதனம் இந்தியாவிற்குள் நுழைந்தால் நமது சுதந்திரம் பாழாய்ப் போய்விடும்'' என முன்பு சுதேசி நாடகமாடிய ஆட்சியாளர்கள், இன்று, ''அந்நிய மூலதனத்திற்குக் கட்டுப்பாடுகள் போட்டால், இந்தியப் பொருளாதாரம் பாழாய்ப்போய்விடும்'' எனத் தட்டைத் திருப்பிப்போட்டுத் தட்டுகிறாகள்.

● பொதுத்துறை நிறுவனங்களை நவீன இந்தியாவின் கோவில்கள் என்றார் 'சுதந்திர' இந்தியாவின் முதல் பிரதமர் நேரு. ஆரியக் கடவுள் ராமனுக்குக் கோவில் கட்டத் துடிக்கும் இந்துமத வெறிக் கும்பல், இந்த நவீன இந்தியாவின் கோவில்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கூறுபோட்டு விற்கிறது. இதற்காகத் தனி அமைச்சகத்தையே உருவாக்கி, நடத்தி வருகிறது மையஅரசு.

● வங்கி, காப்பீடு, பங்குச் சந்தை வர்த்தகம், மின்சாரம், தொலைபேசி ஆகிய சேவைத்துறைகளில் நுழைந்துள்ள அந்நிய நிதி நிறுவனங்கள் மீதான வழக்குகள் - தாவாக்களை நீதிமன்றத்துக்கு வெளியே கட்டைப் பஞ்சாயத்து முறையில் தீர்வு காண்பதற்கு ஏற்ற வகையில் உரிமையியல் சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன.

● ''நிரந்தரத் தொழிலாளி என்பதே இனி கிடையாது. எல்லாத் தொழிலாளர்களுமே ஒப்பந்தத் தொழிலாளர்கள் தான்'' என்றவாறு தொழிலாளர் நலச் சட்டங்களும் தொழிற் தகராறு சட்டங்களும் திருத்தப்படுகின்றன.

● அன்று வெள்ளைக்காரன் ஆட்சியில் ஜமீன்தார்கள் உருவாக்கப்பட்டார்கள். இன்று, ''ஒப்பந்த விவசாயம்'', ''தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்'' என்ற பெயரில் விளைநிலங்களைத் தனியார் முதலாளிகளிடம் கொடுத்து, ''நவீன பண்ணையாளர்கள்'' உருவாக்கப்படுகிறார்கள். இதற்காக, நிலச் சீர்திருத்த சட்டமும், நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டமும் திருத்தப்படுகின்றன.

● அன்று வெள்ளைக்காரன், தனது நாட்டு சாயப் பட்டறைகளுக்காக இந்திய விவசாயிகளை அவுரி பயிரிடச் சொன்னான். இன்று, ஐரோப்பிய, அமெரிக்க சந்தைக்காக பூ, பழம் போன்ற பணப் பயிர்களைப் பயிரிடச் சொல்கிறார்கள்.

● ''அமெரிக்காவின் எதிர்காலம் தான் இந்தியாவின் எதிர்காலம்'' என்பது இன்று இந்தியாவின் அறிவிக்கப்படாத வெளியுறவுக் கொள்கை. ஆப்கானிஸ்தான் மீதும், ஈராக் மீதும் அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்புப் போர்களுக்கு இந்தியா அனுசரணையாக நடந்து கொண்டதையும்; ஈராக்கை மறுகாலனி ஆக்கியுள்ள அமெரிக்காவிற்கு உதவ இந்தியப் படைகளை அனுப்ப பேரம் நடத்தியதையும்; உலக மேலாதிக்கத்திற்காக அமெரிக்கா அறிவித்துள்ள ''தேசிய ஏவுகணைத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருப்பதையும்'' இந்தியாவின் அமெரிக்க அடிவருடித்தனத்திற்கு உதாரணங்களாகச் சொல்லலாம்.

● இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தனியார்மயம் - தாராளமயத்திற்கு ஏற்றவாறு, நாட்டை மறுகாலனியாக்குவதற்கு ஏற்றவாறு, அரைக் காலனி இந்தியாவின் அரசியல் சாசன சட்டத்தைத் திருத்தவும் இந்திய ஆளும் கும்பல் தயாராகி வருகிறது. பா.ஜ.க. கூட்டணி அரசால் இதற்காக உருவாக்கப்பட்ட வெங்கடாசலையா கமிட்டி பரிந்துரை செய்துள்ள திருத்தங்கள், நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காகக் காத்துநிற்கின்றன.



சட்டவாதப் போராட்டத்தின் தோல்வி: மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து மீண்டும் பணியில் சேரக் காத்துக் கிடக்கும் தமிழக அரசு ஊழியர்கள்.

## ஆட்சி மாறினால் அவலம் தீர்ந்துவிடுமா?

தனியார்மயம் - தாராளமயத்திற்கு எதிராக மக்களின் அதிருப்தியும், போராட்டமும் வெடித்துக் கிளம்பும் பொழுதெல்லாம், ''மனித முகத்துடன் கூடிய தாராளமயத்தை'' இனி நடைமுறைப்படுத்தப் போவதாக ஓட்டுக் கட்சிகள் வார்த்தை ஜாலத்தில் இறங்கிவிடுகின்றன. தாழ்த்தப்பட்டவர்களை ''அரிசனங்கள்'' என 'மகாத்மா' பெயரிட்டு அழைத்ததால், அவர்கள் மீதான மேல்சாதி ஒடுக்குமுறை நின்று போய்விட்டதாக என்ன? அதைப் போன்றதுதான் இந்த வார்த்தை விளையாட்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு ஓட்டுக்கட்சியாவது, தாராளமயம் - தனியார்மயத்திற்கு மாற்றாக, வேறு பொருளாதாரக் கொள்கைகளை முன்வைத்து வாக்கு கேட்கிறதா? ஓட்டுக் கட்சிகள் ஆட்சியைப் பிடித்த பிறகு, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படிதான் ஆட்சி நடத்துவார்கள் என்பதற்கு உத்திரவாதம் இருக்கிறதா?

● கடந்த தி.மு.க. ஆட்சியின் பொழுது போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும் எனச் சவடால் அடித்த ஜெயா, ஆட்சியைப் பிடித்த பிறகு போக்குவரத்துத் துறையையே தனியார்மயமாக்கத் திட்டம் போடுகிறார்.

● ''இந்தியா ஒளிர்கிறது'' என்ற பா.ஜ.க.வின் பொய்ப் பிரச்சாரத்தை அம்பலப்படுத்தும் காங்கிரசு, பொருளாதார சீர்திருத்தங்களைத் தொடங்கி வைத்த பெருமை தனக்குத் தான் உண்டு என மார்தட்டுகிறது.

● எதிர்க்கட்சியாக இருந்த பொழுது ''சுதேசி'' சவடால் அடித்த பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்த பிறகு தாராளமயத்தை நாலுகால் பாய்ச்சலில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

www.padippakam.com

● போலி கம்யூனிஸ்டுகளோ, தாராளமயத்தைநடைமுறைப்படுத்துவதில், ''மாமியார் உடைத்தால் மண் குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடம்'' என்று நடந்து கொள்கிறார்கள்.

கம்யூனிஸ்டுகளின் ஆட்சியின் கீழ் சோவியத் யூனியனில் மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னெப்போதும் கண்டிராத அளவு உயர்ந்ததால், அனைத்து முதலாளித்துவ நாடுகளும், தங்களின் நாடுகளில் சோசலிச மாற்றம் வராமல் தடுப்பதற்காக, சேமநல அரசு என்ற முகமூடியை மாட்டிக் கொண்டன. ஆனால், உலகமயத்தின் பின் நாடாளுமன்ற ஜனநாயக அரசுகளுக்கு இந்த முகமூடி தேவைப்படவில்லை. 18,19-ஆம் நூற்றாண்டுகளில் இருந்ததைப் போன்ற நிலைமைக்கு - முதலாளிகள், நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாக உழைக்கும் மக்களைக் கசக்கிப் பிழியும் குண்டாந்தடி அரசாக அவை மாறிவிட்டன. இந்த நிலைமையில் இந்தக் கட்சிக்கோ, அந்தக் கட்சிக்கோ; இந்தக் கூட்டணிக்கோ, அந்தக் கூட்டணிக்கோ ஓட்டுப் போடுவதன் மூலம் உலகமயத்தின் தாக்குதலில் இருந்து தப்பிவிடலாம் என்பது பேதமைத்தனமாகும்.

இது ஒருபுறமிருக்க, வேலை நிறுத்தம் செய்யத் தடை; கடையடைப்புப் போராட்டம் நடத்தத் தடை; பொதுமக்கள் கூடும் முக்கிய சாலையில் பொதுக் கூட்டம் - ஊர்வலம் நடத்தத் தடை என சட்டபூர்வமாக எதிர்ப்பு தெரிவிக்க இருந்த வழிகள் அனைத்தும் நீதிமன்றத் தீர்ப்புகளால் பறிக்கப்பட்டுவிட்டன.

வேலை நிறுத்தம் செய்வதைச் சட்ட விரோதமாக்கிய நீதிமன்றத் தீர்ப்பை விமர்சிக்கிறது 'மார்க்சிஸ்டு' கட்சி. ஆனால், அக்கட்சியின் மேற்கு வங்க மாநில முதல்வரோ, ''உலகமயச் சூழலில் போட்டி அதிகமாகிவிட்டது. அதனால், தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தக் கூடாது'' என உபதேசிக்கிறார். 'கம்யூனிஸ்டுகளே' இப்படி இரட்டை வேடம் போடும் பொழுது, மற்ற ஓட்டுக் கட்சிகளைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

தனியார்மயம் - தாராளமயத்தை எதிர்த்துப் போராடும் தொழிலாளர்கள் மீது ''எஸ்மா''வும், ''டெஸ்மா''வும் பாய்கின்றன. ''தீவிரவாதத்தை ஒழிக்க வந்த'' பொடா, மறுகாலனி ஆதிக்கத்தை எதிர்க்கும் நக்சல்பாரிகள் மீது பாய்கிறது. கருப்புச் சட்டங்களைப் போட்டு அரசு பாசிசமயமாகி வருவதையும், நாடு மறுகாலனியாவதையும் பிரித்துப் பார்க்க முடியாது. மறுகாலனி ஆதிக்கத்தையும், பாசிசத்தையும் எதிர்த்துச் சட்ட



ஆக்ராவில் நடந்த அமெரிக்க-இந்தியப் படைகளின் கூட்டுப் பயிற்சியில் இந்திய மற்றும் அமெரிக்க சிப்பாய்கள்: இது உறவின் நெருக்கமா? அமெரிக்க இராணுவ ஆதிக்கமா?

வரம்புகளைத் தாண்டிதான் போராட முடியும்; ''சட்ட விரோதமாக''த் தான் போராட வேண்டும் என்ற நிலையை ஆளுங்கும்பலே உருவாக்கி விட்டது.

**ஓட்டுக்கட்சிகளின் துரோகத்தனம்**

''உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து வெளியேற வேண்டியதில்லை. அந்த அமைப்புக்குள்ளிருந்தே போராடி சில சலுகைகளைப் பெறுவதுதான் புத்திசாலித்தனம்'' என வாதாடுகிறார்கள் பொருளாதார நிபுணர்கள். அதாவது, ''ஏகாதிபத்திய முதலாளிகள் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்; ஏழை நாடுகள் எலும்புத் துண்டுகளுக்காகக் காத்திருக்க வேண்டியதுதான்'' என்பதைத் தவிர, இந்தப் புத்திசாலித்தனத்திற்கு வேறு பொருள் கொள்ள முடியாது!

''போராடி பெறப்படும் எலும்புத் துண்டுகளால்'' மக்களுக்கு ஏதாவது பயன் கிட்டுமா? இந்தச் சலுகைகள் தாராள இறக்குமதியைத் தடுத்து நிறுத்தி விடுமா? ரேசன் அட்டையில் இருந்து ''ஹெச்'' முத்திரையை நீக்கி விடுமா? வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக் கட்டி விடுமா? - இவை போன்ற கேள்விகளுக்கெல்லாம் ஒரே பதில் நிச்சயமாக இல்லை என்பதுதான்.

''அமெரிக்க மேலாதிக்கத்தின் மறு பெயர்தான் உலகமயம்'' என அமெரிக்காவின் முன்னாள் அரசுச் செயலர் கிஸ்ஸிங்கர் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.

இதற்கும் ஒருபடி மேலே போய், ரிச்சர்ட் ஹாஸ் என்ற அமெரிக்க அரசின் வெளிவிவகாரக்கொள்கை ஆலோசகர், ''மூன்றாம் உலக நாடுகளின் இறையாண்மை வரம்புக்கு உட்பட்டது; ஒரு நாடு தீவிரவாதத்துக்கு ஆதரவு தருவதாக, அமெரிக்காவின் நலன்களுக்கு எதிராகச் செயல்படுவதாக நாங்கள் கருதினால், அந்நாடுகளில் தலையிட எங்களுக்கு உரிமை இருக்கிறது'' என வெளிப்படையாகவே ஏழை நாடுகளை மிரட்டியிருக்கிறார்.

அமெரிக்க நலனுக்கு உட்பட்டு தான் சலுகைகள் கிடைக்கும்; அதை மீறினால், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் விழுவதைப் போல அமெரிக்காவின் யுரேனியம் குண்டுகள்தான் கிடைக்கும். இந்த மேலாதிக்க மிரட்டலை எதிர்க்கும் துணிவை ஓட்டுக்கட்சிகளிடம் எதிர்பார்க்கமுடியுமா?

பா.ஜ.க. கூட்டணி ஆட்சி 1998-இல் அணுகுண்டு சோதனை நடத்தியபொழுது, அமெரிக்கா இந்தியாவிற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்தத் தடைகளை எதிர்த்துப் போராட முதுகெலும்பில்லாத பா.ஜ.க. அடுத்த ஆண்டே, 1429 பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இருந்த தடைகளையும், கட்டுப்பாடுகளையும் அடியோடு நீக்குவதற்கு அமெரிக்காவோடு இரகசிய ஒப்பந்தம் போட்டு, அமெரிக்காவை தாஜா செய்தது.

நாடாளுமன்றத்தில்கூட விவாதம் நடத்தாமல், ஏகாதிபத்தியங்கள் காட்டிய இடத்தில் உலக வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்ட அடிமைப்



படிப்பகம்

www.padippakam.com

புத்தி கொண்ட கட்சிதான் காங்கிரசுக் கட்சி.

அமெரிக்காவின் ஆதரவு இல்லாமல், இந்தியத் தரகு முதலாளிகளாலும், அவர்களின் அரசியல் பிரதிநிதிகளான காங்கிரசு, பா.ஜ.க. கட்சிகளாலும் ஒரு நிமிடம்கூட காலந்தள்ள முடியாது. ஏனென்றால், மூலதனம், அறிவியல் - தொழில்நுட்பம், சந்தை என அனைத்துக்கும் இந்தத் தரகுக் கும்பல் அமெரிக்காவையும், மற்ற ஏகாதிபத்தியங்களையும் சார்ந்தே இருக்கிறது. பாகிஸ்தானோடு நடந்த கார்கில் சண்டையில் கூட அமெரிக்காவின் நாட்டாண்மையை ஏற்றுக் கொண்ட இவர்கள், அரசியல் சுதந்திரத்துக்காக அமெரிக்காவை எதிர்த்து போராடுபவர்கள் எனக் கற்பனை கூட செய்துபார்க்கமுடியாது.

ஒருபுறம் தனியார்மயம் - தாராளமயத்தைத் தாங்கள் ஆளும் மாநிலங்களில் நடைமுறைப்படுத்திக் கொண்டே, இன்னொருபுறம் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புச் சவடால் அடிக்கிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள். அது வேறு, இது வேறு என நாடகமாடுகிறார்கள். மறுகாலனி ஆதிக்கத்தை எதிர்த்து சுயேச்சையாக அமைப்பைக் கட்டிப் போராடும் திராணியற்ற இவர்கள், உள்நாட்டில் தரகு முதலாளிகளின் கட்சியான காங்கிரசுக்கு வால் பிடிக்கிறார்கள்; ஏகாதிபத்தியங்களின் கள்ளக் குழந்தைகளான அரசு சாரா நிறுவனங்களோடு ஐக்கிய முன்னணி கட்டிக் கொண்டு, ஏகாதிபத்திய எதிர்ப்பு பித்தலாட்டம் ஆடுகிறார்கள். அரசு சாரா நிறுவனங்களின் மூலம் மக்களின் எதிர்ப்பை நீர்த்துப் போகச் செய்யும் ஏகாதிபத்தியங்களின் சதிக்குத் துணைபோகிறார்கள்.

**நாடாளுமன்றம் - மறுகாலனி ஆதிக்கத்தின் கருவி**

அமெரிக்காவை எதிர்த்துப் போராடுவதற்கு ஓட்டுக்கட்சிகளை மட்டுமல்ல, நாடாளுமன்ற ஜனநாயக அரசு அதிகார அமைப்பு முறையையே நம்ப முடியாது. மைய அரசின் நிதி அமைச்சகத்தில் உட்கார்ந்துள்ள முக்கிய அதிகாரிகள் அனைவரும் உலக வங்கியிடம் பயிற்சி பெற்றவர்கள். யாரை நிதிமந்திரியாக நியமிப்பது என்பதற்கே உலக வங்கியின் ஒப்புதல் தேவைப்படுகிறது. ராவ் ஆட்சியில் மன்மோகன் சிங்கும்; பா.ஜ.க. ஆட்சியில் முரளி மனோகர் ஜோஷிக்குப் பதிலாக யஷ்வந்த் சின்காவும் உலக வங்கியின் விருப்பப் படிதான் நிதி மந்திரிகளாக நியமிக்கப் பட்டார்கள்.

''அமெரிக்காவின் கடல் போர் கல்லூரியில் பயின்றவர்கள்தான் இந்தியக் கப்பற்படையின் முக்கிய அதிகாரிகளாக இருக்கிறார்கள்; அவர்கள் மூலம் இராணுவத் திட்டங்கள் அனைத்தும் அமெரிக்காவிற்குப் போய் விடுகிறது. இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டசு சி.ஐ.ஏ. ஏஜெண்ட்'' என வெளிப்படையாகவே குற்றஞ் சுமத்தினார், முன்னாள் கப்பற் படை தளபதி விஷ்ணு பகவத்.

**அமெரிக்க நலனுக்கு உட்பட்டுதான் சலுகைகள் கிடைக்கும்; அதை மீறினால், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் விழுவதைப் போல அமெரிக்காவின் யுரேனியம் குண்டுகள் தான் கிடைக்கும்.**

நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறும் முன்பே, இந்தியா உலக வர்த்தகக் கழகத்தில் உறுப்பினராக இணைந்தது. உலகவங்கியின் கட்டளைகள்தான், நாடாளுமன்றத்தின் மூலம் பட்ஜெட்டாகவும், பொருளாதாரத் திட்டங்களாகவும் அறிவிக்கப்படுகின்றன. சிலசமயங்களில், நாடாளுமன்றத்திற்குத் தெரியாமலேயே, அமெரிக்க நாட்டில் இருந்து கூட பொருளாதார சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. (1429 பொருட்களுக்கு இறக்குமதி தடை நீக்கப்பட்டது; 2004-ஆம் ஆண்டின் மினி பட்ஜெட் போன்றவை) 'சுதந்திர' இந்தியாவின் நாடாளுமன்றம் இதற்கு எதிராகச் சுண்டுவிரலைக் கூட அசைத்ததில்லை; அசைத்தால் என்ன நடக்கும் என்பது நமது அமெரிக்க அடிவருடிகளுக்குத் தெரியும்.

தென்னமெரிக்காவில் உள்ள சிலி நாட்டில் தேர்தல்களின் மூலம் அதிபரான சோசலிசவாதியான அலெண்டே, அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தில் இருந்த செப்புச் சுரங்கங்களை நாட்டுடைமை ஆக்கினார். உடனே அமெரிக்காவின் சி.ஐ.ஏ., சிலி நாட்டின் இராணுவத்தைத் தூண்டி விட்டு, அதிரடி அரண்மனை புரட்சியை நடத்தியது. அலெண்டே சுட்டுக் கொல்லப்பட்டு, அமெரிக்க அடிவருடி பினோசெட் அதிபராக்கப்பட்டார் என்ற பழைய வரலாற்றை நினைவுபடுத்திப் பாருங்கள். இந்தியத் தலைவர்களின் அச்சமும், அடிவருடித்தனமும் புரியவரும்.

தென்னமெரிக்காவின் இன்னொரு நாடான வெனிசுலாவின் அதிபர் சாவெஸ், அமெரிக்காவிற்கு எதிராகச் சில நடவடிக்கைகளை எடுத்தார் என்ற ஒரே காரணத்திற்காக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவரது ஆட்சியை எதிர்க்கட்சிகளைத் தூண்டிவிட்டுக் கலைத்தது, அமெரிக்கா. எனினும், பதவியிழந்த சாவெஸ், மக்களின் ஆதரவோடு மீண்டும் அதிபராகி ஆட்சிக் கவிழ்ப்பு சதியை மூன்றே நாட்களில் முறியடித்தார். எனினும் அமெரிக்கா, அந்நாட்டு எதிர்க்கட்சிகளின் பிடியில் உள்ள தொழிற்சங்கங்களைத் தூண்டி வேலைநிறுத்தம் நடத்தி, எண்ணெய் உற்பத்தியை முடக்கியது. அதிகார வர்க்கம் முழுவதும் அமெரிக்கா ஆதரவு, அதிபர் ஆதரவு எனப் பிளவுப்பட்டுக் கிடக்கிறது. அடுத்த தேர்தலில் அதிபர் சாவெஸ் தோற்றால், அமெரிக்க அடிவருடிகள் சட்டபூர்வமாகவே அதிகாரத்துக்கு வந்துவிடுவார்கள்.

●●●

இப்பொழுது இந்திய உழைக்கும் மக்களின் முன் எழுந்துள்ள கேள்வி நாட்டின் சுதந்திரம், இறையாண்மையா? இல்லை, மறுகாலனிய அடிமைத்தனமா? என்பதுதான்.

அமெரிக்கா திணிக்கும் மறுகாலனியத் தாக்குதலை முறியடிக்க நமக்கு நாடாளுமன்றமும், தேர்தல்களும் பயன்படாது; தேர்தல்களின் பின் ஆட்சி மாறினாலும், அமெரிக்க அடிவருடித்தனம் கொண்ட அதிகார வர்க்க அரசமைப்பு முறை மாறப் போவதில்லை. தனியார்மயம் - தாராளமயத்தை எந்த அரசாங்கமும் தூக்கி எறிந்துவிடப் போவதில்லை. அமெரிக்காவின் கூட்டாளிகளான இந்தியத் தரகு முதலாளிகளையும், அறிஞர் உதயமூர்த்தி, அரசியல் தரகர்கள் சுப்பிரமணிய சுவாமி, சோ போன்ற அமெரிக்காவின் ஏஜெண்டுகளையும் நாடு கடத்திவிடப் போவதில்லை.

எனவே, இதற்கு மாற்றாக, அமெரிக்க அடிவருடிகளுக்கு எதிரான அரசியல் போராட்டங்கள்தான் நமக்குத் தேவை; இந்த அரைக் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பையும்; இதனைப் பாதுகாக்கும் இந்திய அரசையும் தூக்கி எறிந்துவிட்டு, அதனிடத்தில் புதிய, சுதந்திரமான இந்தியாவை நிர்மாணிக்கும் சுதந்திரப் போராட்டம்தான் தேவை!

●சுப்பு



படிப்பகம்

www.padippakam.com

# சாதி–மத பிழைப்புவாதத்தில் புரளும் போலி கம்யூனிஸ்டுகள்

"சௌராஷ்டிர மக்களின் நலனுக்காக... தோழர் பி. மோகன்" என்ன செய்தார்? எங்கு செய்தார்? என்று மதுரை தொகுதி முழுக்க தண்டோரா போடுகிறது, 'மார்க்சிஸ்டு' கட்சி.

விசயம் இதுதான், அ.தி.மு.க. கட்சியிலிருந்து நீக்கப்பட்ட, மதுரை - கிழக்கு தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வான சௌராஷ்டிர சாதியைச் சேர்ந்த எஸ்.ஆர். ராதாவை திடீரென தன் கட்சியில் மீண்டும் சேர்த்துக் கொண்டார், ஜெயலலிதா. இதன்மூலம், தனக்கு மதுரை தொகுதியில் உள்ள ஒன்றரை லட்சம் சௌராஷ்டிரர்களின் ஓட்டுக்கள் விழும்என்று பகடைஉருட்டினார்.

பிழைப்புவாதத்தில் கொட்டை போட்ட அ.தி.மு.க.வினரே ஆடிபோகுமளவு 'மார்க்சிஸ்ட்' கட்சி எதிர் பகடை உருட்டியது. தன்கட்சியின்வேட்பாளர், மோகன்சென்றமுறை மதுரைத்தொகுதி எம்.பி.யாக இருந்தபோது எம்.பி. நிதியில்சௌராஷ்டிர மக்கள்வாழும் இடங்களில் கட்டிய கட்டிடங்கள், பாலங்களைப் பட்டியல் போட்டு பிரசுரம், சுவரொட்டிகளை தொகுதி முழுக்க வெளியிட்டது.

மேலும், 'மதுரைவீரன்' எம்.ஜி.ஆர். பாணியில் ஜெயலலிதாவே மிரண்டு போகுமளவு மக்களின் நெஞ்சங்களை கொள்ளையிடுகின்றனர் மார்க்சிஸ்டுகள். புகைப்படக்காரரை பக்கத்திலேயே வைத்துக்கொண்டுசாலையோரங்களில் டீ குடிப்பது, 'மொபட்டில்' சென்று ஓட்டுக்கேட்பது என்று மக்களின் வாழ்க்கையில்திடீரென 'ஐக்கியமாகி' விட்டனர்.

இதே பாணியில், நாகர்கோயில் தொகுதியின் 'மார்க்சிஸ்டு' வேட்பாளர் பெல்லார்மின், தொகுதியில் பெரும்பான்மையாக இருக்கும் கிறிஸ்தவர்களின் ஓட்டுக்களை வாருகிறார். மேலும், வெற்றிக்கு தேவையான அஸ்திரங்களை எதிரிகள் மீது சரஞ்சரமாக வீசுகிறார்.

தன்னை எதிர்க்கும் பா.ஜ.க. வேட்பாளர் சி.பி.ராதாகிருஷ்ணன், 'அம்மா'விடம் ஆசி வாங்கினால், இவர் நேரடியாக நிஜயானையிடமே ஆசி வாங்குகிறார். இதற்காக, தொகுதியில் இருக்கும் இந்துக் கோயில்களுக்குள்நுழைந்து அங்கிருக்கும்யானைலத்தியைக் கூட கும்பிடுகிறார். அனைத்து மதத்தலைவர்களிடம் ஆசி பெறுவதும் வழிபாட்டுத்தலங்களுக்குச்செல்வதும் தான் அக்கட்சியினரின் மதச்சார்பற்ற கொள்கையாகிவிட்டது.

இதே பாணியில்தான், தி.மு.க. கூட்டணியின் வெற்றிக்கு தமிழகம் முழுக்க படாதபாடு படுகிறார்கள், இப்போலி கம்யூனிஸ்டுகள். சுட்டுக் கொல்லப்பட்டஅரசியல்ரௌடிவெங்கடேசபண்ணையாரின் மனைவி ராதிகா செல்வியின் வெற்றிக்காக, திருச்செந்தூர் தொகுதி முழுவதும் சுழன்று வேலை செய்கிறார்கள். வள்ளியூரில் ஹர்கிஷன்




சிங் சுர்ஜித்தலைமையில் பொதுக்கூட்டமும்நடத்தியுள்ளார்கள்.

1970-களில் இப்பகுதிகளில்தான் "நிலமீட்பு" போராட்டசவடால் அடித்தனர், இப்போலி கம்யூனிஸ்டுகள். பெருமளவு நிலங்களை வளைத்துப் போட்டிருந்த டி.வி.எஸ். பண்ணை, தாதன்குளம் பண்ணை போலவே, வெங்கடேச பண்ணையாரின்தகப்பனாரான "மூலக்கரை பண்ணை"யாரும் முக்கியமானவர். இவர்களைத்தான் இப்போது ஏழைகளின்தோழனாக, விவசாயிகளின்நண்பனாக மக்களிடம் விற்கிறார்கள், இப்போலிகள் இது மட்டுமின்றி, கொடியன்குளத்தில் தலித் மக்களை வேட்டையாடிய, சாதிவெறியர்களான மறவர் சாதி தலைவர்களோடு கூடிக் குலாவுகின்றனர். மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தேவர்சாதி வெறியர்களுக்கும் தமது மேடையில் பங்கு கொடுத்து கௌரவிக்கின்றனர்.

பதவி நாற்காலிக்காக, ஓட்டுப் பொறுக்கி அரசியலின் கடைகோடி நிலைக்குச் சென்றுவிட்ட இப்பிழைப்புவாதிகளுக்கு இன்னும் எதற்கு செங்கொடி?

● இராசு

**காந்தி, நேரு, பாரதி, ராஜீவ்காந்தி ஆகிய கம்யூனிச விரோதிகளை கம்யூனிச ஆதரவாளர்களாக சித்தரித்து மதுரை 'மார்க்சிஸ்ட்' கட்சியினரின் நூதன தேர்தல் பிரச்சாரம்: காந்திய சோசலிசம்.**





படிப்பகம்

www.padippakam.com

# தேர்தல் ஆணையத்தின் கையாலாகத்தனம்

இந்திய அரசுக் கட்டமைப்பில் பல்வேறு விதமான துறைகளும், அவற்றை நிர்வகிக்க அதிகாரிகள் பட்டாளமும் குவிந்து கிடக்கின்றன. எனினும், இந்த அரசுத் துறைகளுள் ஒன்றான தேர்தல் ஆணையத்தைப் பத்தோடு பதினொன்றாகச் சேர்க்கமுடியாது.

உச்சநீதி மன்றத்துக்கு இணையான சுயேச்சையான அதிகாரம் கொண்ட அமைப்பு தேர்தல் ஆணையம். தலைமைத் தேர்தல் ஆணையர்களை மைய அரசின் ஒப்புதலோடு குடியரசுத் தலைவர்தான் நியமிக்கிறார். தலைமைத் தேர்தல் ஆணையர்களைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றால், நாடாளுமன்ற உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். தேர்தல் நடக்கும் காலத்தில், மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்ட போலீசு கண்காணிப்பாளர்கள், அரசின் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து உயர் அதிகாரிகளும் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுவார்கள். மாநில அரசோ, மைய அரசோ, ஓர் உயர் அதிகாரியை இடம் மாற்றுவது என்றாலும், ஒருதிட்டத்தை அறிவிப்பது என்றாலும் அதற்குத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

சட்டமன்றம், நாடாளுமன்றம், குடியரசுத் தலைவர் தேர்தல்கள் வரை நடத்த வேண்டிய பொறுப்புகள் கொண்ட தேர்தல் ஆணையம், அத்தேர்தல்களைச் சுதந்திரமாகவும், நாணயமாகவும் நடத்துவதற்காகத்தான், ஆணையத்திற்கு வானளாவிய அதிகாரங்கள் தரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் சேஷன் தொடங்கி இந்நாள் ஆணையர் டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி வரை, அனைவரும் இந்த ''வானளாவிய'' அதிகாரங்களை தங்களை ''ஹீரோ''க்களைப் போலக் காட்டிக் கொள்ளத்தான் பயன்படுத்தினார்கள் / பயன்படுத்துகிறார்களேயொழிய அதற்கு அப்பால் தேர்தல் முறைகேடுகள், அராஜகங்களைத் தண்டிப்பதற்கு நடுநிலைமையோடு பயன்படுத்துவதில்லை. குறிப்பாக, தேர்தல் நடத்தை விதிமுறைகளை மயிரளவிற்குக்கூட மதிக்காமல் ஆட்டம் போட்டு வரும் பார்ப்பன - பாசிசக் கும்பலைத் தண்டிப்பதற்குத் தேர்தல் ஆணையமோ / தேர்தல் ஆணையர்களோ தங்களின் வானளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்தியதேயில்லை.

தற்பொழுதுநடைபெறவுள்ளநாடாளுமன்றத் தேர்தல்களையொட்டி, தி.மு.க., ஆளும் அ.தி.மு.க. மீது 150 புகார்களைத் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்திருக்கிறது. தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகளும் கூடத் தனித்தனியாக அ.தி.மு.க. மீது பல புகார்களை எழுத்து மூலமாக ஆணையத்தில் பதிவு செய்துள்ளன.

இந்தப் புகார்களில், மகளிர் சுய உதவிக் குழுக்களை, அ.தி.மு.க., தனது மகளிர் அணி போலப் பயன்படுத்தி வருவது; சோனியா, கருணாநிதி உள்ளிட்டு எதிர்க்கட்சித் தலைவர்களை அ.தி.மு.க.வின் தலைவி ஜெயா தொடங்கி அக்கட்சியின் மேடைப் பேச்சாளர்கள் வரை அனைவரும் தரக்குறைவாகத் தாக்கிப் பேசி வருவது; வாக்காளர் பட்டியலில் நடந்துள்ள தில்லுமுல்லுகள்; தென்மாவட்டங்களில், குறிப்பாக ஜெயாவின் தோழி சசிகலாவின் அண்ணன் மகன் தினகரன் போட்டியிடும் பெரியகுளம் தொகுதியில் நடைபெறும்தேர்தல்நடத்தைவிதிமீறல்கள் என்ற நான்கு குற்றச்சாட்டுகளுக்கும் அநேக ஆதாரங்கள் உள்ளன.

''12 இலட்சம் அரசு ஊழியர்களின் ஓட்டு நமக்குக் கிடைக்காது; அதனால், தமிழகத்தில் உள்ள அங்கீகாரம் பெற்ற 98,000 மகளிர் சுய உதவிக் குழுக்களை அ.தி.மு.க.வின் ஓட்டு வேட்டைக்குப் பயன்படுத்திக் கொள்வது'' எனத் தேர்தலுக்கு முன்பே அ.தி.மு.க. அரசு திட்டமிட்டு, அமைச்சர்களுக்கு வாய்மொழி உத்தரவிட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் 20-ஆம் தேதி மதுரையில் அகில இந்திய மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டம் நடந்த பொழுது, மேலூர் எ.வள்ளாளப்பட்டியைச் சேர்ந்த 140 மகளிர் சுய உதவிக் குழுக்களை, அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சாமி, அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்திடம் அழைத்துச் சென்றிருக்கிறார். பன்னீர்செல்வம் அக்குழுக்களுக்கு சில உத்தரவாதங்களைக் கொடுத்து, களத்தில் இறங்கி வேலை செய்ய உத்தரவிட்டுள்ளார்.

இந்த முறைகேடு பற்றி மதுரை தொகுதி மார்க்சிஸ்டு கட்சி வேட்பாளர் மோகன், அம்மாவட்ட தேர்தல் அதிகாரியான மாவட்ட ஆட்சியாளரிடம் புகாராகக் கொடுத்திருக்கிறார். மாவட்ட ஆட்சியாளரோ புகாரை வாங்கிப் படிக்காமலேயே, ''அந்த மகளிர் குழுக்கள்

**லக்னோ சேலை விநியோக சம்பவத்தில் மிதிபட்டு இறந்து போன பெண்கள்: ஓட்டுக்குப் பயன்படாத இந்தப் பிணங்களின் மீது தேர்தல் ஆணையத்திற்குக் கூட அனுதாபம் கிடையாது.**





படிப்பகம்

www.padippakam.com

அரசின் உதவி பெறாதவை. அதனால் நான் கட்டுப்படுத்த முடியாது'' எனக் கையை விரித்துவிட்டார். (நக்கீரன், 27.3.04)

மாநிலத் தலைமை தேர்தல் ஆணையர் சாரங்கி, அரசியல் கட்சிகளை அழைத்துத் தேர்தல் தொடர்பாக ஆலோசனை நடத்திய பொழுது, வலது கம்யூனிஸ்ட் கட்சியினர் ''மகளிர் சுய உதவிக் குழுக்களை ஆளுங்கட்சி எப்படியெல்லாம் பயன்படுத்துகிறது'' என்று மாவட்ட வாரியாக ஊர் மற்றும் பெயர்களுடன்புகாராகக்கொடுத்தனர்.

குறிப்பாக, தென்காசி தொகுதியில் அ.தி.மு.க. சார்பாகப் போட்டியிடும் முருகேசனின் மனைவி வசந்தி, இரவோடு இரவாகச்சென்று, 1,000 ரூபாய் பணமும், சேலையும் கொடுத்து, மகளிர் சுய உதவிக் குழுக்களை வளைத்து வருகிறார் எனக் குற்றஞ்சுமத்தியது வலது கம்யூ. கட்சி (ஜனசக்தி, 11.4.2004)

ஆளும் அ.தி.மு.க. கும்பல் மகளிர் சுய உதவிக் குழுக்களை வளைக்கும் பணியை மார்ச் மாதமே தொடங்கிவிட்டது. ஆனால், இது பற்றி ஏப்ரல் 15-ஆம் தேதிதான்தேர்தல் ஆணையம்வாயைத் திறந்தது. அதுவும்எப்படி தெரியுமா?

''மகளிர் சுய உதவிக் குழுக்களை ஆளுங்கட்சியினர்தங்கள் தேர்தல் பிரச்சாரங்களுக்குப்பயன்படுத்திக்கொள்வதாக ஆணையத்துக்குப் புகார்கள் தரப்பட்டுள்ளன. இது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் முடியும்வரை மகளிர் சுய உதவிக் குழுக்களின் கூட்டங்களை நடத்தக் கூடாது என மாவட்ட ஆட்சியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.''

பூனை கண்ணை மூடிக் கொண்டு உலகம் இருண்டு விட்டதாகநினைத்துக் கொள்ளுமாம். அதைப் போல இருக்கிறது தேர்தல் ஆணையத்தின் உத்திரவு. இந்த உத்திரவுக்குப் பிறகுதான் அமைச்சர் நயினார் நாகேந்திரன் பொறுப்பிலுள்ளதிருச்செந்தூர் - நெல்லை தொகுதிகளில், ''மகளிர் சுய உதவிக்குழு பெண்கள் தங்கள் வண்ணப் புகைப்படங்களைக் குழுத் தலைவியிடம் கொடுத்து ரூ. 1000 பெற்றுக் கொள்ளலாம்'' என அ.தி.மு.க. அறிவித்திருப்பதாகப் புகார் எழுந்திருக்கிறது. (நக்கீரன் 21.4.04) இந்தப் புகார்களையெல்லாம் ஆணையம் விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்குள் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலே வந்துவிடும். தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதியல்லவா!

●●●



ஓட்டுவேட்டையாட போலீசு பாதுகாப்போடு பவனி வரும் அத்வானியின் ரத யாத்திரை: இந்த நன்னடத்தை விதி மீறலை தேர்தல் ஆணையம் கண்டுகொள்ளவில்லை.

தனிநபர் மீதான விமர்சனங்களுக்கு ஆணையம் தானாகவே தடை விதிக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஆனால், இந்தப் பிரச்சினையில் தரக்குறைவாகப் பேசிய யார் ஒருவர் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது ஒருபுறமிருக்க, சென்னையில் நடந்த தேர்தல் பணிகள் ஆய்வுக் கூட்டத்தில், தேர்தல் ஆணையர்களுள் ஒருவரான தமிழ்நாட்டு பார்ப்பனர் என். கோபாலசாமி மிகவும் நைச்சியமான முறையில் பார்ப்பன - பாசிச கும்பலுக்கு சந்தேகத்தின்பலனைக்கொடுத்தார்.

''சோனியா காந்தியை விமர்சித்து அவரது பதிபக்தி பற்றி பிரச்சாரங்களில் பேசப்பட்டது பற்றிக் கேட்கிறீர்கள். பதிபக்தி போன்ற விசயங்களுக்கு என்ன அளவுகோல் என்கிற பிரச்சினை எழுகிறது. எனவே, இது போன்ற தனிநபர் தாக்குதல் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுப்பது என்பது இயலாத காரியம்'' என பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டார் என்.கோபாலசாமி. (தினமணி, 15.04.04)

இந்த ஆணையர் இன்னும் ஒருபடி மேலே போய், ''பொதுவாக அரசியல் கட்சிகளின் பிரச்சாரத்தின் தரம் உயர வேண்டும். தமிழகத்தில் இன்னும் அது குறைவாகஇருக்கிறது'' எனதுக்ளக்சோ போன்ற 'தேசியவாதிகள்' அலுத்துக் கொள்வதைப் போல அலுத்துக் கொண்டார்.

அறுக்கத் தெரியாதவன் கையில் ஆயிரம் கருக்கருவாள் என்ற கதையாக இருக்கிறது தேர்தல் ஆணையரிடம் உள்ள அதிகாரம். தமிழகத்தின் அரசியல் தரத்தை நிர்ணயிக்க அளவுகோல் வைத்திருக்கும் கோபாலசாமியிடம் ஜெயாவின்தரக்குறைவானபேச்சைநிர்ணயிக்க அளவுகோல் இல்லை எனப் பூசுற்றுகிறார். இது ஆணையரின் கையாலாகாத்தனமா? பார்ப்பன விசுவாசமா?

●●●

பெரியகுளம் தொகுதியில் காங்கிரசு கட்சி வேட்பாளராகப் போட்டியிடும்ஜே.எம். ஆருண், 1,000 கார் பவனி வரத் தனது பிரச்சாரத்தைத் தொடங்கியதால், ஆருண் உள்ளிட்டு 3,000 பேர் மீது தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதற்காக ஆறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேர்தல் ஆணையம் உத்திரவிடும் முன்பே தேனி மாவட்ட போலீசார் வழக்குகளைப் பதிவு செய்திருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

அதேசமயம், பெரியகுளம் தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும்



படிப்பகம்

www.padippakam.com

டி.டி.வி. தினகரன், 400 கார்களுடன் தனது பிரச்சாரத்தைத் தொடங்கியது தேர்தல் நடத்தை விதிமுறை மீறல் குற்றமாகப் பதிவு செய்யப்படவில்லை. இது பற்றிய புகார் தேர்தல் ஆணையத்தின் மேசையில் தூங்கிக் கொண்டிருக்கிறது. (ஜூனியர் விகடன், 14.4.04)

●●●

ஆலங்குளம் அருகேயுள்ள மாறாந்தையைச் சேர்ந்த சங்கரபாண்டியன் என்ற 70 வயது தி.மு.க. பிரமுகரையும் சேர்த்து ஐந்து பேரை போலீசார் தடுப்புக்காவலில் கைது செய்துள்ளனர். இந்த அதிகார அத்துமீறல் பற்றி போலீசாரிடம் கேட்டால், போலீசு அதிகாரிகள், "நாங்கள் மேலிட உத்திரவுப்படி கைது செய்திருக்கிறோம்" எனப் பதில் அளித்துள்ளனர். (ஜனசக்தி, 11.4.04).

இதுகூட பரவாயில்லை. கடலூர் மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் தேர்தல் ஆணையர் கோபாலசாமியிடம் நேருக்கு நேராக, "அரசு சொல்வதை நான் செய்கிறேன்" எனக் கூறியிருக்கிறார். (ரிப்போர்ட்டர் 22.4.04)

சென்னை நகர வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் நடந்த தில்லுமுல்லுகளுக்கு முறையாகப் பதில் அளிக்காததால், சென்னை மாவட்ட ஆட்சியாளரைத் தூக்கியடித்தது, தேர்தல் ஆணையம். இந்த தண்டனையாவது மற்ற மாவட்ட அதிகாரிகளுக்குக் கிடைக்குமா? என எதிர்கட்சிகள் ஆணையத்திடம் கேள்வி எழுப்புகின்றன. ஏனென்றால், தூத்துக்குடி, நெல்லை, வேலூர், தர்மபுரி மாவட்ட உயர் அதிகாரிகளின் மீது கூறப்பட்ட புகார்கள் பற்றி தேர்தல் ஆணையம் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அந்த அதிகாரிகளிடம் இனி மேல் இப்படி செய்யாதீர்கள் எனக் கூறி மன்னித்துவிட்டார், தேர்தல் ஆணையர் கோபாலசாமி. (ஜூனியர் விகடன், 25.4.04 & ரிப்போர்ட்டர் 22.4.04)

"கரூர் மாவட்ட ஆட்சியாளர் ஒத்துழைப்பதில்லை என்று அந்த மாவட்ட தேர்தல் பார்வையாளர் சஞ்சய் அவஸ்தி, சுனில் சந்திர புளிதாவும்; கோவை மாவட்ட ஆட்சியாளர் முருகானந்தம் ஒத்துழைப்பதில்லை என்று அம் மாவட்ட பார்வையாளர் விவேக் குமார் சிங்கும்; தேனி மாவட்ட ஆட்சியாளர் பற்றி அந்த மாவட்ட தேர்தல் பார்வையாளர் பாரத் பூஷனும் தமிழகத் தேர்தல் ஆணையர் சாரங்கியிடம் புகார் கொடுத்துள்ளனர். "நீங்கள் கேட்கும் தகவல்களை மாவட்ட ஆட்சியாளர்களைத் தரும்படி சொல்லுகிறேன்" எனப் புகார் கொடுத்தவர்களுக்கு ஆறுதல் சொல்லி அனுப்பிவிட்டார், சாரங்கி.

**தேர்தல் ஆணையத்தின் நடுநிலை என்பது பல்வேறு சமயங்களில் ஆளுங்கட்சியின் அத்துமீறல்களையும் கண்டுகொள்ள மாட்டோம்; எதிர்க் கட்சிகளையும் தண்டிக்க மாட்டோம் என்பதாக தான் இருக்கிறது.**

தேர்தல் ஆணையம், தேர்தலை நடத்துவதற்கு மாநில அரசு அதிகாரிகளையும், மைய அரசின் அதிகாரிகளையும் சார்ந்துதான் இயங்கி வருகிறது. இந்த அரசு அதிகாரிகள் ஆளுங்கட்சிக் குச்சார்பாக நடந்து கொள்வதை தேர்தல் ஆணையத்தால் தடுக்க முடியாத பொழுது, தேர்தல் சுதந்திரமாகவும், நாணயமாகவும் எப்படி நடைபெறும்?

தேர்தல் ஆணையமும் கூட நடுநிலை தவறாது சட்டப்படி நடந்து கொள்வதில்லை என்பதற்கு இன்னொரு சான்று லக்னோ படுகொலை சம்பவம். வாஜ்பாயி போட்டியிடும் லக்னோ தொகுதியில் பா.ஜ.க. ஏற்பாடு செய்து நடத்திய சேலை வழங்கும் விழாவில் நடந்த மரணங்களை ஆணையமும் விபத்தாகத் தான் பார்க்கிறது. அதனால் தான் வாஜ்பாயின் தேர்தல் ஏஜெண்டான லால்ஜி டாண்டன் மீது கொலை வழக்குபதிவுசெய்யப்படாமல், வெறும் இலஞ்சக் குற்ற வழக்கும் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் நடுநிலை என்பது பல்வேறு சமயங்களில் ஆளுங் கட்சியின் அத்துமீறல்களையும் கண்டு கொள்ள மாட்டோம்; எதிர்க்கட்சிகளையும் தண்டிக்க மாட்டோம் என்பதாக தான் இருக்கிறது. குறிப்பாக, பா.ஜ.க.வின் தொலைக்காட்சி விளம்பரங்கள் சோனியாவையும்; காங்கிரசின் தொலைக்காட்சி விளம்பரங்கள் வாஜ்பாயியையும் தரக்குறைவாகத் திட்டுவதாக இரண்டு கட்சிகளுமே ஒன்றையொன்றைக் குற்றம் சாட்டிக் கொண்டன. இந்தக் குற்றச்சாட்டுகளில் எதில் உண்மையிருக்கிறது என ஆராய விரும்பாத தேர்தல் ஆணையம், உச்சநீதி மன்றத்தின் உதவியோடு, இனி ஒளிபரப்பப்படும் ஓட்டுக்கட்சிகளின் தேர்தல் விளம்பரங்கள் ஆணையத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற சட்டத்தைப் போட்டுத்தப்பித்துக் கொண்டது.

தேர்தல் ஆணையத்தின் விதிப்படி நாடாளுமன்ற வேட்பாளர் 25 இலட்சம் ரூபாய் வரைதான் தேர்தல் செலவு செய்ய வேண்டும். இதற்கு மாறாக, தி.மு.க., தேர்தலில் போட்டியிட விரும்பிய தனது கட்சிக்காரர்களிடமிருந்து 60 லட்ச ரூபாய் வசூலித்ததை தமிழ்நாடே அறியும். இதை அ.தி.மு.க., தேர்தல் ஆணையத்திடம் புகாராகப் பதிவு செய்துள்ளது. இதற்காக தி.மு.க.வைத் தண்டிப்பது என்பது கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல்லெறிவதைப் போன்றது என்று ஆணையத்திற்குத் தெரியும். அதனால் இக்குற்றசாட்டை விசாரிப்பதாக நாட்களைத் தள்ளிப் போடுகிறது.

●●●

தேர்தல் ஆணையாளர்களாக அமர்த்தப்படும் அதிகாரிகள் வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்ல. அவர்களுக்கும் ஓட்டுக் கட்சி அரசியல் தலைவர்களுக்கும் இடையே பல்வேறு வழிகளில் இரகசியமான உறவுகள் இருந்து கொண்டேதான் இருக்கும்.

ஓட்டுக்கட்சிகளுக்குச் சிம்மசொப்பனமாக விளங்கியவர் எனப் புகழப்பட்ட சேஷனையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர், ராஜீவ் காந்தி முன் கூனிக் குறுகி நின்று, வாலை ஆட்டிக் காண்பித்து, முறைகேடான வழியில்தான் தலைமை தேர்தல் ஆணையர் பதவியைப் பிடித்தார். ஓட்டுக் கட்சிகளைத் திட்டித் தீர்த்த இந்த சேஷன், பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின் எம்.பி. பதவியைப் பிடிக்க சிவசேனா தலைவர் பால் தாக்கரேயின் காலில் விழுந்தார். முன்பு தேர்தல் ஆணையாளராக இருந்த எம்.எஸ்.கில், இன்று காங்கிரசின் தயவில் மேலவை எம்.பி. ஆகிவிட்டார். இப்படி ஓய்வுகாலப் பலன்களை எதிர்பார்க்கும் அதிகார வர்க்கம், தேர்தல் ஆணையராக இருக்கும்பொழுது நடுநிலையோடும், நாணயமாகவும் நடந்து கொள்வார்கள் என்பதற்குஎந்த உத்திரவாதமும் கிடையாது.

மேலும், தேர்தல் ஆணையம் எவ்வளவுதான் சுயேச்சையானதாகவும், வானளாவிய அதிகாரங்கள் கொண்டதாக இருந்தாலும், அது இன்றைய அரசமைப்பின் ஓர் அங்கம்தான். இந்த அரசமைப்பில் காணப்படும் எல்லா குறைபாடுகளும் மோசடிகளும், தேர்தல் ஆணையத்திலும் கூடுதலாகவோ, குறைவாகவோ காணப்படும். எனவே தேர்தல் ஆணையத்தையும், தேர்தல் ஆணையர்களையும் ஓட்டுச்சீட்டு அரசியல் சீரழிவை ஒழிக்க வந்த தூதர்களைப் போல பார்ப்பதற்கு எந்த அடிப்படையும் கிடையாது.

● செல்வம்



படிப்பகம்

# போலீசு ஆட்சி

தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சார இயக்கத்தை வீச்சாக நடத்தி வருகின்றன. சென்னையில் ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் புறக்கணிப்பு சுவரொட்டியை 26.4.04 அன்று ஒட்டிய பு.மா.இ.மு. செயலர் தோழர் கார்த்திகேயன், பொருளாளர் தோழர் கோவிந்தசாமி ஆகியோரையும், இச்சுவரொட்டிகளை ஒட்டச் சொன்ன 'குற்றத்திற்காக' ம.க.இ.க. மாநிலப்பொருளாளர்தோழர்சீனிவாசனையும் போலீசார் கைது செய்து பொய் வழக்குப் போட்டனர். 26.4.04 அன்று மாலை எழும்பூர் பெருநகரக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு தோழர்கள் கொண்டு வரப்பட்ட போது, ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள் திரண்டு போலீசு அராஜகத்துக்கு எதிராக முழக்கமிட்டதோடு, தேர்தல் புறக்கணிப்பு - மே நாள் பிரசுரத்தை பொதுமக்களிடம் விநியோகித்தனர். 'இது சட்டவிரோதச் செயல்' என்று முன்னணியாளர்கள் 6 பேரை நீதிமன்ற வளாகத்திலேயே போலீசார் கைது செய்து - 9 தோழர்களையும்சிறையிலடைத்துள்ளனர்.

இதேபோல், ஏப்ரல் 22-ஆம் நாளன்று தோழர் லெனினது பிறந்த நாளையொட்டி சுவரொட்டி ஒட்டிய 'குற்றத்திற்காக' பென்னாகரம் வி.வி.மு. தோழர் வதியன், தருமபுரி பு.மா.இ.மு. தோழர் சீனு ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓட்டுப் போடுவதும், ஓட்டுப் போடாமல் தேர்தலைப் புறக்கணிப்பதும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை. ஆட்சியாளர் நயந்தும் வலிந்தும் எச்சரித்த போதிலும், தேர்தல் பாதையின் மோசடித்தனத்தை அனுபவ ரீதியாக உணர்ந்து தேர்தலைப் புறக்கணிக்கும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மறுகாலனியாதிக்கத்தால் தமது வாழ்வு நாசமாக்கப்பட்டுள்ளதால் பீறிட்டு எழும் மக்களின் கோபமும், தண்ணீர் பஞ்சத்துக்கு எதிரான தன்னெழுச்சியானகலகங்களும்தேர்தல்புறக்கணிப்பும் ஆட்சியாளர்களைப் பீதியூட்டுகின்றன. எனவேதான், சுவரொட்டிகளைக் கூட கண்டு அஞ்சி, அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். மே நாள் பொதுக் கூட்டம் - பேரணிநடத்தக் கூட அனுமதி மறுத்து தடை விதித்து தொழிலாளர் வர்க்கத்தின் அடிப்படை உரிமையைக் காலில் போட்டு மிதிக்கின்றனர்.

நடப்பது ஜனநாயக ஆட்சியல்ல; பாசிச அடக்குமுறையை நோக்கிய பாய்ச்சல் என்பதையே எதிரிகளின் அடக்குமுறை மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது. ●

## "ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்தின் ஆரிய-பார்ப்பன சாம்ராஜ்யக் கனவைத் தகர்த்தெறிவோம்!"

### — தேர்தல் புறக்கணிப்பு பொதுக் கூட்டங்கள்

இந்தியாவை இந்து சாம்ராஜ்யமாக்கும் வெறியோடு இந்துவெறியர்கள் வெளிப்படையாக தேர்தல் களத்தில் இறங்கி மும்முரமாக வேலை செய்து வருகின்றனர். ஒருக்கால், டெல்லியில் ஆட்சியைப் பிடிக்க முடியாமல் போனால், இந்து வெறி கலவரங்களையும் படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்டு ஆட்சியைப் பிடிக்கவும் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகின்றனர். இந்தப் பேரபாயத்தை ஓட்டுச் சீட்டால் முறியடித்துவிட முடியாது. உழைக்கும் மக்கள் இந்துவெறி பாசிச பயங்கரத்துக்கு எதிராகப் பெரும்படையாகத் திரண்டெழுந்து முறியடிக்க வேண்டுமென்பதை விளக்கியும், புரட்சிகர அமைப்புகள் வெளியிட்டுள்ள, "ஆர்.எஸ்.எஸ். பரிவாரத்தின் ஆரிய - பார்ப்பன சாம்ராஜ்யக் கனவைத் தகர்த்தெறிவோம்!" என்ற நூலை அறிமுகப் படுத்தியும் திருச்சியில் தேர்தல் புறக்கணிப்புப் பொதுக்கூட்டங்களை பு.மா.இ.மு. நடத்தியது.

17.4.04 அன்று திருவரம்பூர் பேருந்து நிலையத்திலும் 20.4.04 அன்று துவாக்குடி - அண்ணா வளைவு அருகிலும் நடந்த பொதுக்கூட்டங்களில் முறையே தோழர் காளியப்பன் (ம.க.இ.க.) தோழர் சிவகாமு (வி.வி.மு.) ஆகியோர் சிறப்புரையாற்றினர். இறுதியாக, ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி, போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சியது. ஓட்டுப் பொறுக்கிகளின் தேர்தல் கூத்துக்களைக் கண்டு வெறுத்தொதுக்கும் உழைக்கும் மக்கள், பெருந்திரளாக இப்பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு ஆதரவளித்தனர். ●





## லெனின்

### — ஸ்டாலின்

புதிய ஜனநாயகம் வெளியீடு  விலை: ரூ.20

தோழர் லெனினிடம் நிறைந்திருந்த மார்க்சியப் பேராற்றல், கம்யூனிச தலைமைப்பண்புகள் குறித்தும், லெனினிடம் நிறைந்திருந்த சிறப்பான பாட்டாளி வர்க்கப் பண்புகள் குறித்தும் தோழர் ஸ்டாலின் எழுதிய கட்டுரைகளையும் ஸ்டாலினது நேர்காணலையும் கொண்டது இச்சிறு நூல். பாட்டாளி வர்க்கப் பேராசான் லெனின் குறித்தும், அவர் மார்க்சியத்திற்கும்; உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கும்; ரசியப் புரட்சிக்கும் அளித்த மகத்தான பங்களிப்புகள் பற்றி இந்நூல் எளியையாக விளக்கிச் சொல்கிறது.




## ஸ்டாலின்

### தேர்தல் உரைகள்

புதிய ஜனநாயகம் வெளியீடு  விலை: ரூ.10

"கம்யூனிசம் என்றால் சர்வாதிகாரம்; சர்வாதிகாரம் என்றால் அங்கு தேர்தல்கள் இருக்காது" என்ற மகாமட்டமான பொய்யைத்தான் முதலாளித்துவ அறிஞர்களும், பத்திரிகைகளும் பாமர மக்களின் மூளையில் திணித்து வைத்துள்ளார்கள். ஆனால், சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் ஸ்டாலின் கூட, தேர்தலின் மூலம்தான் சோவியத் யூனியனின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதே வரலாற்று உண்மை.

1937 மற்றும் 1946-ஆம் ஆண்டுகளில் தோழர் ஸ்டாலின் தேர்தல்களில் போட்டியிட்ட பொழுது, பொதுமக்களின் முன் ஆற்றிய இரு உரைகளைக் கொண்ட இச்சிறுநூல், முதலாளித்துவ நாடுகளில் நடைபெறும் தேர்தலுக்கும், சோசலிச ரசியாவில் நடைபெறும் தேர்தலுக்கும் இடையே உள்ள அடிப்படையான வேறுபாடு என்ன? சோசலிச ரஷ்ய மக்கள், தங்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களை எப்படியெல்லாம் கட்டுப்படுத்த முடியும்; கண்காணிக்க முடியும் என்பதை விளக்குகிறது.

**நூல்கள் கிடைக்குமிடம்:**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.**

www.padippakam.com

# தேர்தல் கூத்துக்கள்

"நாடாளுமன்றத் தேர்தல்" என்ற பெயரில் ஓட்டுப்பொறுக்கிகளின் அரசியல் விபச்சாரம் இந்தியா முழுக்க கொடி கட்டிப்பறக்கிறது.

சவால்கள், சபதங்கள், சவடால்கள் என்று பிழைப்புவாத ஓட்டுப் பொறுக்கிகளின் அற்பத்தனங்கள் மாபெரும் அரசியல் பிரச்சாரமாக அரங்கேற்றப்படுகிறது.

தெருவிலேயே தினவை தீர்த்துக் கொள்ளும் விலங்குகள் போல் ஓட்டுப் பொறுக்கிகள் தெருவெங்கும், வக்கிரம், வன்முறை, ஆபாசம் தூண்டும் பேச்சுக்களை மேடைபோட்டு முழங்குகிறார்கள்.

சினிமாவில் வரும் கனவுக் காட்சிகள்போல் - பளிங்கு மண்டபங்கள், பொற்றாமரைக் குளங்கள், கோட்டை - கொத்தளங்கள் என்று மேடைகள் அமைத்துத் தலைவர்கள் தன் பரிவாரங்களுடன் காட்சி தருகிறார்கள்.

கட்சிகளின் ஆஸ்தான விகடகவிகள் எதிரணி மீது ஆபாச வசவுகளையும் தங்கள் தலைவர்கள்மீது துதிப்பாடல்களையும் பாடுகின்றனர். தலைவர்கள் இதைப் புன்முறுவல் பூத்து ரசித்து "வெற்றி நமதே" என்று விரல்களை காட்டுகின்றனர். நகரும் ஐந்து நட்சத்திர ஓட்டல் அறை போன்ற பிரச்சார ரதங்களில் வலம் வருகின்றனர்.

வேட்பாளர்களோ, ஓராயிரம் வெள்ளைக் குதிரைகள் பூட்டிய கனவுத் தேரில் வரும் கதாநாயகன் போன்று 200 கார்கள் பின்தொடர பவனி வருகின்றனர்.

குட்டித் தலைவர்கள் "தேர்தல் பொறுப்பாளர்கள்" என்று பரிவட்டம் கட்டிக் கொண்டு சாம, பேத, தான, தண்டம் என்று எல்லாவற்றையும் மீறிய முறையில் வெற்றிக்கனியைப் பறிக்க வியூகம் வகுக்கின்றனர். சாதிய ஓட்டுக்களை வாருவது, எதிரணியிலிருக்கும் கட்சி மாறிகளை இழுப்பது - முடக்கி வைப்பது, கள்ள ஓட்டு மற்றும் வாக்குச் சாவடிகளை கைப்பற்றும் அடியாட்களை இயக்குவது என்று "தேர்தல்" வேலைகளைத் திறம்பட பார்ப்பதில் கொட்டை போட்டவர்களாக இருக்கிறார்கள்.

குட்டித் தலைவர்களின் காலாட்படையாக இயங்கும் உள்ளூர் அளவிலான கூலிப்பட்டாளம் கட்சியின் கழிவுகளை மக்களிடம் சுமந்துவரும் சாக்கடைக் கால்வாயாக இயங்குகின்றன. சாராயக் கேன்கள், பிரியாணி பொட்டலங்கள், வேட்டி - சேலைகள் மற்றும் ரூபாய் 50,100களைப் பிரித்துக் கொடுத்து வாக்காளர்களை இழுக்கும் "செயல்வீரர்"களாகத் திரிகின்றனர்.

இந்த தேர்தல் "வேலை"களுக்குப் பிறகு வெற்றி விழாக்களைக் கொண்டாடும் கட்சிகள், வழக்கம் போல "தலைவர்களின் தியாகம், தொண்டர்களின் உழைப்பு, கட்சியின் கொள்கை - இவற்றுக்குக் கிடைத்த வெற்றிதான் இது!" என்று நீட்டி முழங்கும். மீண்டும்... நாடாளுமன்ற ஜனநாயகம் உயிர்த்தெழும்!

இப்படி மக்கள் வரிப்பணத்தைக் கொளுத்தி நடத்தும் இத்தேர்தல் திருவிழாவில், ஓட்டுப் பொறுக்கிகள் பெரும் ஆர்ப்பாட்டத்துடன் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் மீது திணிக்கப்பட்ட இந்த நாடாளுமன்றத் தேர்தல், மக்களைத் தவிர மற்ற அனைவருக்கும் பதவி எச்சிலைவரவழைக்கிறது.

மயிர்முனை அளவுகூட கூச்சமின்றி ம.தி.மு.க. வேட்பாளர், திருச்சி தொகுதி எல். கணேசன் இதை தெளிவாகச் சொல்கிறார் கேளுங்கள், "எதிரணியில்(!) உள்ள இரு கட்சிகளும் மாநிலத்திலும் மத்தியிலும் ஆளுங்கட்சிகளாயிருக்கின்றன. அந்த ஆட்சியாளர்கள் மீதான எதிர்ப்பு அலை பலமாக வீசுகிறது. பாசனப் பகுதி நிரம்பிய தொகுதி இது. மூன்று ஆண்டுகளாக விவசாயம் நடக்காமல் விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல, பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள், அரசு அலுவலர்களும் ஆளுங்கட்சிகளுக்குப் பாடம் புகட்ட ஆத்திரத்துடன் காத்திருக்கிறார்கள்.

இயற்கைக் (?) காரணங்கள் எங்கள் வெற்றிக்கு மிகுதியாக உதவி செய்கின்றன. புறக் காரணங்களால் உருவாகியுள்ள சூழ்நிலைகளை நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம்" (ஜூ.வி. 14.4.04) பதவிக் கொழுப்பு தினவெடுத்து எப்படி வாயில் ஒழுகுகிறது பாருங்கள்.

**மதுரை - திண்டுக்கல் ரோட்டில் சின்னாளம்பட்டி மக்கள் குடிநீர் கோரி நடத்திய சாலை மறியல்.**





படிப்பகம்

www.padippakam.com

ஆட்சியிலுள்ள மத்திய - மாநில பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு சகலவிதத்திலும் பல்லக்கு தூக்கிய இவர்கள், இப்போது ''எதிரணி''யினர் என்று உரிமை கொண்டாடி, வேட்டைக்கே செல்லாமல் தொடைக் கறியைப் பங்கு போடக்காத்திருக்கின்றனர்.

ஆனால், தமிழக மக்களோ குடிக்கும் தண்ணீருக்காகதெருவெங்கும்அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு குடம் தண்ணீருக்காக நடு இரவு வரை காத்திருக்கிறார்கள்.

நிலத்தடி நீரே இல்லாத ''கரும்புள்ளிகள்'' என்று தமிழகத்தின் பலபகுதிகளை தமிழக குடிநீர் வாரியம் பட்டியலிட்டுள்ளது.

தமிழகத்தின் பல பகுதிகளில் 1500 அடி ஆழத்திற்குத் தோண்டினாலும் அங்கு நீர் உத்திரவாதமில்லை. வரும் நீரும் - கடின நீராக - எதற்கும் உதவாத அமிலமும் உப்பும் கலந்த நஞ்சாகிக் கிடக்கிறது.

சிவகங்கை - திருப்பாலைக்குடிகிராமத்தில், அசுத்த நீர் குடித்த 60 குழந்தைகள்வாந்தி - மயக்கம்கண்டு மருத்துவமனையில் . சேர்க்கப்பட்டனர். அதில் விபுஷ்ணன் என்ற சிறுவன் இறந்து போனான்.


சிவகங்கை, சேலம், புதுக்கோட்டை, பெரிய குளம், திண்டுக்கல் ஆகிய பகுதிகளில், ஓட்டுவேட்டைக்கு வந்த அ.தி.மு.க. வேட்பாளர்களை ஊருக்குள் விடாமல் மக்கள் விரட்டியடித்தனர். ''எங்களுக்கு முதலில் தண்ணீருக்கு வழி சொல்லுங்கள்'' என்று மந்திரிகளை முற்றுகையிட்டனர்.

''குடிநீர் பிரச்சினைக்காக, ''எதிரணி''யைச் சேர்ந்த கருணாநிதி இப்போது திடீர் கரிசனையோடு குடம் குடமாகக் கண்ணீர் வடிக்கிறார். ''மக்கள்குடங்களைத்தூக்கிக் கொண்டு காவடியா எடுக்கிறார்கள்? குடிநீர் கேட்டு குடங்களோடு போராடுகிறார்கள்'' என்று தெளிவுரை எழுதுகிறார். மக்களின் உயிராதாரமான குடிநீர் பிரச்சினையைத் தூண்டில் மீனாக்கி, அவர் ஓட்டு வேட்டைக்கு இறங்கி விட்டார்.



மன்மதராசா ஆட்டம்; ஆபாச பிரச்சாரம்.

இந்த ஓட்டுப் பொறுக்கிகள்தான், தங்கள் ஆட்சியின்போது, ஒவ்வொரு பட்ஜெட்டிலும் பல ஆயிரம் கோடி ரூபாய்களை தாங்கள் வேட்டையாடுவதற்காக, ஓராயிரம் கூட்டு குடிநீர் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள். அவற்றைக் கருவிலேயே ஊனமாக்கி அடுத்தடுத்த திட்டத்திற்குத் தாவினார்கள். கருணாநிதியின் வீராணம் திட்டமும், ஜெயலலிதாவின் கடல் நீரை குடிநீராக்கும் திட்டமும் இதற்குஉதாரணங்கள்.



ஆனால், ஒவ்வொருமுறையும்தேர்தல்தேதி அறிவித்தவுடனே, மக்கள்பிரச்சினைகளுக்காக ஓட்டுப் பொறுக்கிகள் தேம்பி அழ ஆரம்பித்து விடுகிறார்கள். நாற்காலியைப்பிடிக்க, தமிழ்சினிமாவின் தந்திரத்தை அப்படியே பின்பற்றுகிறார்கள்.

பிழிந்தெடுக்கும் சோகம், திகிலூட்டும் வன்முறை, கிளுகிளுப்பூட்டும் ஆபாசம் ஆகியவற்றை சரிவிகித கலவையில் தேர்தல் பிரச்சாரங்களில் திட்டமிட்டு புகுத்துகிறார்கள். சினிமா மாதிரியே வாக்காளர்களை 'ஏ,பி,சி சென்டர்'களாகத் தரம் பிரித்து மசாலாக்களை கவனமாக சேர்க்கிறார்கள். சினிமாவை தூக்கிநிறுத்தும்பாடல்காட்சிகள்போல, எடுப்பான அரசியல் வசனங்கள் எழுதி தலைவர்கள் வாயசைக்கிறார்கள்.

காவிரிப் பிரச்சினை பற்றி இப்போதுகருணாநிதி ஒப்பாரி வைப்பதும், 'அந்நியர் பிரதமர் ஆவதா' என்று ஜெயலலிதா உதட்டைக் கடிப்பதும் இம்மாதிரியானஉதட்டசைவுகள்தான்!

பி,சி, சென்டர்கள் என்றழைக்கப்படும் கீழ்மட்ட தேர்தல் பிரச்சாரத்தை கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்களின் பொறுப்பில்விடுகிறார்கள்.

சினிமா நடிகைகளின்தொப்புள்நடனம்,சிறப்புஅழைப்பாளர்களின்ஆபாச உரைகள், இன்னும் இத்யாதி விசயங்கள் போலீசு பாதுகாப்புடன் இங்கு அரங்கேற்றப்படுகிறது.

''புள்ளி ராஜா கருணாநிதி'', ''வாத்துவாயன் ஸ்டாலின்'', ''டக்கு வாத்து ஜெயலலிதா'' இப்படி இன்னும் எழுதமுடியாத சிவப்பு விளக்கு ஆபாசங்களைக் காட்டி வாக்காளர்களை சுண்டி இழுக்


படிப்பகம்

www.padippakam.com

கின்றனர். இந்த கிளுகிளுப்புகளுக்கு நடுவில், 'நல்லாட்சியை தேர்ந்தெடுக்கும் ஜனநாயகக் கடமையை மக்கள் ஆற்ற வேண்டும்' என்று தீர்த்தத்தைத் தெளிக்கிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ். ''சோ'' வகையறாக்கள் 'குடிநீர்பிரச்சினையை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு ஓட்டுப் போட இது என்ன முனிசிபாலிடி எலெக்சனா? இது, நாடாளுமன்றத் தேர்தல்! ஒரு அந்நியர் பிரதமராவதா? என்பதுதான் இப்போது கேள்வி?' என்கின்றனர். இவர்கள் அந்நியருக்கு நாட்டைக் கொடுப்பார்கள்! ஆனால், நாற்காலியை மட்டும் கொடுக்கமாட்டார்களாம்!

நாடாளுமன்றம் என்பதே ஏகாதிபத்தியங்களின் ஏலக்கடைதான்! தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற பெயரில் இந்தியாவை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு காட்டிக்கொடுக்கும் தரகர்கள்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

மாபெரும் மலைகளாக பரந்து விரிந்திருந்த காட்டு வளங்களை இந்துஸ்தான் லீவர் போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கும், ஆற்று வளங்களை - அதன் நீரை, கோக்-பெப்சி அமெரிக்க குளிர்பான நிறுவனங்களுக்கும், ஆற்றுப் படுகையை - அதன் மணலை, அடுக்குமாடி நிறுவனங்களுக்கும் பாராளுமன்றத்தில் பட்டா போட்டு கொடுத்து விட்டனர், ஓட்டுப் பொறுக்கிகள். மழை பொழிவதற்கு மூலாதாரங்களை கூறு போட்டு விற்றுவிட்டு இப்போது, மக்களிடம் காய்ந்த வானத்தைக் காட்டி ஒப்பாரிவைக்கிறார்கள்.

ஒரே ஒருமுறை ஓட்டு வாங்கிய ஓட்டுப் பொறுக்கிகள் எல்லாம் இப்போது பலகோடிகளுக்கு அதிபதிகளாகி விட்டார்கள். ஆனால் 13 முறை ஓட்டுப் போட்ட மக்களோ, கோவணத்துடன் குடிநீருக்கு அலைகிறார்கள். அவர்களுக்கு உணவில்லை, வேலையில்லை, வீடில்லை, நிலமில்லை, கல்வியில்லை. ஆனால், ஓட்டு மட்டும் இருக்கிறது. அவலத்தில் வாழும் ஆப்பிரிக்கர்கள் சொல்வார்கள், ''ஆங்கிலேயர்கள் எங்களிடம் வரும்போது, அவர்களிடம் பைபிள் இருந்தது; எங்களிடம் நிலம் இருந்தது. இப்போது எங்களிடம் பைபிள் இருக்கிறது; நிலம் அவர்களிடமிருக்கிறது'' என்பார்கள். இங்கே, ஓட்டுப் பொறுக்கிகளோ, ஓட்டை மக்களுக்கு கொடுத்துவிட்டு, நாட்டை அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

மலத்தைத் தடவிவிட்டு பணத்தை பறித்து ஓடும் நான்காம் தர திருடர்கள் போல, வாக்காளர்களிடமிருந்து ஓட்டைப் பிடுங்கிச்செல்லும் ஓட்டுச் சீட்டு கட்சிகளை, தேர்தல் கமிசனின் நன்னடத்தை விதிகள் எந்த விதத்திலும் தண்டிப்பதில்லை. தேர்தல் வாக்குறுதிகள் என்ற பெயரில் ஓட்டுப் பொறுக்கிகள், வாக்காளர்களின் நெற்றிகளில் குழைத்துப் போடும் நாமத்தை ''சுவர் விளம்பரங்கள்'' என்ற அளவில்கூட தேர்தல் கமிசன் கண்காணிப்பதில்லை. இவையெல்லாம் வேட்பாளர்களுக்கு வழிவழியாக வரும் மரபுரிமையாக பாதுகாக்கப்படுகின்றன. தேர்தல் கமிசனின் முக்கிய கவலையெல்லாம் ஓட்டுச் சீட்டுக் கட்சிகளின் வேட்பாளர்கள் தங்களுக்குள் தரக்குறைவாக விமர்சித்துக் கொண்டு ''தேர்தல்'' பற்றி ஒரு அருவெறுப்பை, கசப்புணர்வை வாக்காளர் மத்தியில் விதைக்கக்கூடாது என்பதுதான்.

சினிமாவில் 14-வது ரீலில் படம் முடிய 10 நிமிடத்திற்கு முன்பு வில்லன் மனம்திறந்து தன்தவறை உணர்ந்து மனிதனாக மாறுவது போல், இத்தேர்தலில் அதிசயம் நடக்கப் போவதாக, 14-வது நாடாளுமன்ற தேர்தல் திரைக்கதையை கவனமாகசெதுக்குகிறார்கள் கொட்டை போட்ட அரசியல்வாதிகள்.

மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டிய தருணமிது. குடிநீரை பறித்து வாக்குரிமையை வாயில் திணிக்கும் ஓட்டுப் பொறுக்கிகளை நடுத்தெருவில் நிறுத்தித் தோலுரிக்கவேண்டும்.

● பச்சையப்பன்

# கந்திலி சந்தை கேட் கொள்ளையை ஓட்டுச் சீட்டால் ஒழிக்க முடியுமா?

வேலூர் மாவட்டத்தில் கந்திலி, மட்றப்பள்ளி, பொய்கை முதலான பல்வேறு வாரச்சந்தைகளைக் குத்தகைக்கு எடுக்கும் கொள்ளையர்கள், தமக்குள் சிண்டிகேட் அமைத்து குறைந்த விலைக்கு ஏலத்தில் எடுத்து, பின்னர் அதை பகிரங்க ஏலம் விட்டு பல லட்சங்களை அள்ளிச்செல்வது தொடர்கிறது.

கந்திலி வாரச்சந்தையை ரூ. 1.42 லட்சத்துக்கு ஏலம் எடுத்த கொள்ளையர்கள், அதை வெளியில் ரூ. 3.99 லட்சத்துக்கு ஏலம்விட்டு ரூ. 2.57 லட்சத்தைச் சுருட்டிக் கொண்டுள்ளனர். ஏலம் எடுத்தவர்களோ அரசு நிர்ணயித்த கேட் வரியை விட 10 மடங்கு அதிகமாக விவசாயிகளிடம் வியாபாரிகளிடமும் அடியாட்களை வைத்து பறித்துக் கொள்கின்றனர். உதாரணமாக, கந்திலி வாரச் சந்தையில் விற்பனைக்கு வரும் 4000 ஆடுகளுக்கு - ஒரு ஆட்டுக்கு ரூ. 10 என கேட் வரியை போட்டுப்பிடுங்குகின்றனர். இதுதவிர, காய்கறிகள், பழங்கள், உணவுதானியங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் மற்றும் பிறவற்றுக்கான கேட் வரியையும் சேர்த்து ஆண்டுக்கு சராசரியாக ரூ. 20 லட்சத்துக்கும் மேல் வசூலாகிறது. ஆனால் சந்தை கேட் கொள்ளையர்கள் குத்தகையாக அரசுக்குச் செலுத்துவது ரூ. 1.42 லட்சம்தான். எஞ்சிய பல லட்சக்கணக்கான ரூபாய் இக்கொள்ளையர்களாலும் அவர்களது கூட்டாளிகளான யூனியன் சேர்மன், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், போலீசு அதிகாரிகளால் சூறையாடப்படுகிறது. வறட்சியால் இம்மாவட்ட விவசாயிகள் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, ஈவிரக்கமின்றி பகற்கொள்ளையில் இக்கும்பல் ஈடுபட்டு வருகிறது. கும்பிடிகாம்பட்டியைச்சேர்ந்த முன்னாள் போலீசுக்காரரான நாகராஜ் என்பவர், இக்கொள்ளைக் கூட்டத்தின் தலைமைத் தளபதியாக - தாதாவாக வளர்ந்து கொட்டமடிக்கிறார்.

இக்கொள்ளைக் கூட்டத்தின் அடாவடித்தனம், அவமானப்படுத்தல் - துன்புறுத்தல்களால் குமுறிக் கொண்டிருந்த விவசாயிகளும் வியாபாரிகளும் இப்பகுதியில் இயங்கும் வி.வி.மு.வின் தொடர் பிரச்சாரத்தால் உத்வேகமடைந்து கடந்த ஏப்ரல் 10 மற்றும் 17-ஆம் தேதிகளில் கேட் வரிக்கு எதிர்ப்பு தெரிவித்து, வழக்கமான இடத்தில் அல்லாமல் தனியாக சந்தையைக் கூட்டினர். இதில் எந்தவிதமான வரியோ, கெடுபிடியோ இல்லாமல் வியாபாரம் நடந்தது. வியாபாரிகளுக்கு விவசாயிகளே பாதுகாப்பு கொடுத்தனர்.

இதைத் தொடர்ந்து கந்திலி சந்தை கேட் கொள்ளையர்களை அம்பலப்படுத்தியும், ஓட்டுச்சீட்டால் இக்கொள்ளையை ஒழிக்க முடியாது; உழைக்கும் மக்களே தங்கள் கையில் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு இவர்களைத் தண்டிக்க வேண்டுமென விளக்கியும் வி.வி.மு. பிரசுரம் வெளியிட்டு கந்திலி சந்தையில் விநியோகித்தது. இதைக் கண்டு ஆத்திரமடைந்த தாதா நாகராஜ், தனது அடியாட்களுடன் வந்து பிரசுரம் விநியோகித்த தோழர்களை மிருகத்தனமாகத் தாக்கியுள்ளான். பின்னர் போலீசார் தலையிட்டு தாதா நாகராஜைக் கைது செய்ததோடு, வட்டார வி.வி.மு. அமைப்பாளரான தோழர் பெரியசாமியையும் கைது செய்து பொய் வழக்கு போட்டு, கொள்ளைக் கும்பலுக்குத் தனது விசுவாசத்தைக் காட்டியுள்ளனர்.

வரியில்லாத தனிச்சந்தை தொடங்க முன்னணியில் நின்ற வி.வி.மு. மீது பெரிதும் நம்பிக்கை வைத்துள்ள விவசாயிகளும் வியாபாரிகளும், சந்தை கேட் கொள்ளையர்களை ஒழிக்க வி.வி.மு. துணையுடன் அடுத்த கட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

*— வி.வி.மு., கந்திலி*

www.padippakam.com



# ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகள்: தாகம் தீரக் கானல் நீர்

தேர்தலுக்குத் தேர்தல் நடக்கும் பல கேலிக் கூத்துகளில் ஒன்றாக ஏராள மான வாக்குறுதிகளை ஓட்டுக் கட்சிகள் வாரி வழங்குகின்றன. இந்த வாக்குறுதி களைநிறைவேற்றுவதற்கானவழிவகை களோ, திட்டங்களோ அந்த ஓட்டுக் கட் சிகளிடம் கிடையாது. நாட்டு மக்களின் பொருளாதாரக் கோரிக்கைகளை யாரா வதுவிரும்பினால்கூடநிறைவேற்றவே முடியாது. இதற்கான காரணங்களை அறிய வேண்டுமானால் இவ்வளவு காலமும் கட்டிப் பாதுகாத்துப் பராமரிக் கப்பட்டு வரும் நாட்டின் தற்போதைய பொருளாதார ஒழுங்கமைப்பையும் அதன் போக்கையும் புரிந்து கொள்ள வேண்டும்.

### இந்தியத் திட்டமிடுதலில் தரகு முதலாளிகளின் அக்கறை

ஆங்கிலேய வைசராயின் நிர்வாகக் கவுன்சிலில் நிதி உறுப்பினராக, அமைச் சருக்கு ஒப்பானவராக இருந்தவர் சர் ஜார்ஜ்சுஸ்டர்என்றவெள்ளைஅதிகாரி. அவர் 1932 ஜூனில் அரசின் கோப்பில் "ஒரு ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட் டம் மாதிரியான ஏதாவதொரு சாத னத்தை இந்திய அரசாங்கம் வகுத்திட வேண்டும். அதற்கு உடனடியாக நடை முறைப் பயன்பாடு இல்லாமல் போனா லும், நாட்டு நலனுக்காக அப்படி ஒரு முயற்சி செய்யப்பட வேண்டும்" என்று முன்மொழிந்திருக்கிறார்.

1934 ஏப்ரலில் இந்திய முதலாளி கள் சங்கத்தில் பேசிய நாட்டின் மிகப் பெரிய தரகு முதலாளியான ஜி.டி. பிர்லா, பொருளாதாரத் திட்டமிடுதலின் அவசியம், இந்தியா அதை மேற் கொள்ளவேண்டியதன் அவசரம் ஆகிய வற்றைவலியுறுத்தியிருக்கிறார். மைசூர் மன்னனின் திவானும், நாட்டின் மிக முக்கிய தரகு அதிகாரியுமான விசுவேசு வரய்யா அதே 1934-இல் இந்தியா வின் "திட்டமிட்ட பொருளாதாரம்" என்ற ஆய்வுநூலைவெளியிட்டார்.

1938-இல் தேசியத் திட்டக் கமிட்டி ஒன்றை நேரு தலைமையில் காங்கிரசு அமைத்தது. அதில் நாட்டிலிருந்த காங்கி ரசு, காங்கிரசு அல்லாத ஆட்சியினர் மற்றும் ஐதராபாத், மைசூர், பரோடா, திருவாங்கூர், போபால் சமஸ்தான மன் னர்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இன்று நாட்டிலுள்ள பெரும் தரகு அதி கார வர்க்க முதலாளிகளின் தகப்பன் மார்களும் ஆங்கிலேய ஏகாதிபத்தியத் தின் பிரதிநிதிகளும் அன்று அக்கமிட்டி யில் இருந்தனர். டாடா அதற்கான நிதி, இடம் மற்றும் ஊழியர் போன்ற பல வச திகளைச்செய்துகொடுத்தார்.

1942-இல் நாடே "வெள்ளையனே வெளியேறு" என்ற போராட்டத்தில் ஈடு பட்டிருக்கும்போது, இந்தியப் பெரும் தரகு அதிகார வர்க்க முதலாளிகளான டாடா, பிர்லா, சிரீராம், கஸ்தூரிபாய், லால்பாய், புருஷேத்தம்தாஸ், தாக்கூர் தாஸ், ஏ.டி.ஷோராப், ஜான் மத்தாய் ஆகியோர் பொருளாதாரத் திட்ட நகல் தயாரிப்பு வேலையைத் தொடங்கினார் கள். 1944 ஜனவரி மற்றும் டிசம்பரில் இரண்டு பகுதிகளாக "பம்பாய் திட் டம்" என்ற ஒரு 15 ஆண்டுத்திட்டத்தை அவர்கள்தயாரித்துவெளியிட்டார்கள்.

இந்தியத் தரகு பெருமுதலாளிகள் தயாரித்தளித்த பம்பாய் திட்டம் எனப் பட்ட அந்த 15 ஆண்டுத் திட்டத்தின் சாரம்: ஏகாதிபத்திய மூலதனம் மற்றும் இந்திய அரசு ஆகிய இரண்டு ஊன்று கோல்களைக் கொண்டுதான் ஊனமுற் றுள்ள இந்தியப் பொருளாதாரம் எழுந்து நடமாட முடியும். ஏகாதிபத்திய நாடுகளில் இருந்து இயந்திரங்கள் முத லிய மூலதனப் பொருட்கள், தொழில் நுட்பம் மற்றும் மூலதனக் கடன்கள் பெறுவது அவசியம் என்று அத்திட்டம் வலியுறுத்துகிறது. பெருமளவில் அரசு பற்றாக்குறை "பட்ஜெட்" போட்டு, நாணயத் தாள்களை அச்சிட்டு, செயற்கை மூலதனத்தை உற்பத்தி செய் வது; அரசுக்குச் சொந்தமான ஒரு தொழிற்துறையை உருவாக்குவது; இவை இரண்டையும் அடித்தளமாகக் கொண்டுதான் தனியார் தொழில் வளர முடியும்என்றும்கூறியது.

தொழிற்துறையில் ஒரு கணிசமான அளவுக்கு அரசு தலையீடு செய்வதை யும் கட்டுப்படுத்துவதையும், அவற் றோடு அரசுடைமை மற்றும் அடிப்ப டைத் தொழில்களிலும், பொதுச் சேவைத் துறைகளிலும் அரசு நிர்வாகத் தையும் இந்தியத் தரகு முதலாளிகள் தயாரித்த பம்பாய் திட்டம்அங்கீகரித் தது. தனியார்துறை மற்றும் பொதுத் துறை ஆகிய இரண்டும் அடங்கிய கலப் புப் பொருளாதாரக் கொள்கை அந்தத் திட்டத்திலேயே உள்ளடங்கியிருந்தது. "தனிநபர் சுதந்திரத்தையும் தொழில் சுதந்திரத்தையும் தற்காலிகமாக பாதிக் கும் என்றாலும் நடைமுறையில் பொருளாதார வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும்முற்றாகவும்கடுமையாக வும் அரசாங்கம் கட்டுப்படுத்த வேண் டும்" என்று இத்திட்டம் மூலம் தரகு முத லாளிகளேவலியுறுத்தினர்.

"வலது கம்யூனிஸ்டுகள்" என்ற ழைக்கப்படும் போலிகள் நம்புவதைப் போல, இந்திய முதலாளிகள் ஏகபோக மற்றவர்கள், தேசிய - ஜனநாயக முற் போக்கு முதலாளிகள் என்பதால் அவர் கள்அரசுத்துறைக்கட்டுப்பாடுகளையும் தொழில்களையும் ஆதரிக்கவில்லை. இலாபம் குறைவானது, மிகமிகப் பெரு மளவுமுதலீடுகள்தேவையானது. அதே சமயம் தனியார்துறையின் தொழிற்

**நாட்டின் பொருளாதார ஒழுங்கமைப்பு மற்றும் திட்டமிடும் முறையை அடியோடு மாற்றி அமைப்பதற்கு பதிலாக பொய்யான வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு ஓட்டுக்களைப் பொறுக்கிக் கொண்டு போகின்றவைதான் எல்லா ஓட்டுக் கட்சிகளும்**


படிப்பகம்

www.padippakam.com

வளர்ச்சிக்கேஅவசியமானதுஎன்பதால் தான்இதைஅவர்கள்வரவேற்றார்கள்.

பம்பாய் திட்டத்தைத் தயாரிப்பதில் முக்கியப் பங்காற்றிய, டாடா இரும்பு எஃகு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சர் அர்தேஷிர்தலால், ஆங்கிலேயக் காலனியவாதிகளின் இந்திய மத்திய அரசாங்கத்திட்டமிடுதல் மற்றும்வளர்ச் சித்துறையின்பொறுப்பாளராக நியமிக் கப்பட்டார். இங்கிலாந்து அரசாங்க மந் திரியான அமெரியும், நவீன இந்தியா வின் 'சிற்பி' பண்டித நேருவும் பம்பாய் திட்டத்தை வெகுவாகப் பாராட்டி வர வேற்றனர்.

உடனடியாகவே, டாடா, பிர்லா தலைமையிலான இந்தியத்தரகுமுதலா ளிகளின் குழுவொன்று இங்கிலாந்துக் குப் பயணம் போய் பிரிட்டிஷ் தொழில் நிறுவனங்களின் பேரவையுடன் கலந்து பேசியது. அப்போது இந்தியத்தரகுமுத லாளிகளும் பிரிட்டிஷ் ஏகபோக ஏகாதி பத்திய முதலாளிகளும் கூட்டுச்சேர்ந்து இந்தியாவில் தொழில்கள் நடத்துவதை விரிவாக்கவும் உறுதிப்படுத்தவும் முடிவு செய்தனர். ''இரு தரப்பும் கூட்டு றவு ஏற்பாடுகளுக்கு ஒப்புக் கொள்வது; இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு இணை வது''என்றுமுடிவானது. ''இந்தியமூலத னம் அதன் செல்வாக்கு மற்றும் தொழில் வர்த்தக நிறுவனங்களுடன் கூட்டணி அமைப்பதன் சாதக அம்சங்கள் தாமே விளங்கும்'' என்று பிரிட்டிஷ் ஏகபோ கங்கள்கூறின.

## இந்தியத்திட்டமிடுதலில் காலனியவாதிகளின்அக்கறை

பம்பாய்த் திட்டம் வெளியான அடுத்த ஆண்டே (1945) இந்தியக் காலனி அரசாங்கத்தின் மறுகட்டுமானக் கமிட்டி, மறுகட்டுமானத் திட்டமிடுத லுக்கான இரண்டாவது அறிக்கைவெளி யிட்டது. அந்த ஆண்டு ஏப்ரலில் இந்திய அரசாங்கத்தின் திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சிக்கான துறை, தொழிற் கொள்கை அறிவிக்கை வெளியிட்டது. ஆங்கிலேயக்காலனிய இந்திய அரசாங் கத்தின் இந்த இரு வெளியீடுகளும், இந் தியத் தரகு முதலாளிகள் தயாரித்த பம் பாய் திட்டமும் ஒரே தன்மையுடைய வையாக இருந்தன. ஏனென்றால் இத் திட்டங்களை தயாரித்தவர் டாடா நிறு வன நிர்வாக இயக்குநரான சர் அர்தே ஷிர்தலால்தான். அரசாங்கத்தின் 1945 தொழிற்கொள்கையானது வலியுறுத்திச் சொன்னது, ''அரசாங்கத்தினுடைய திட் டம், பம்பாய்த் திட்டம் ஆகிய இரண்டி னுடைய நோக்கங்கள் ஒன்றாகவே உள்ளன.''

இந்த 1945 அரசாங்கத் தொழிற் கொள்கை, ''நாட்டின் தொழிற்துறை வளர்ச்சியில் எதிர்கால அரசாங்கம் செய லூக்கமிக்க பாத்திரம் வகிக்க வேண் டும்'' என்று கூறியதோடு, 20 தொழில் களை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்று பரிந்து ரைத்தது; தனியார் மூலதனம் முன்வர வில்லையென்றால் அவற்றைத் தேசவு டைமையாக்க வேண்டும் என்றும் கூறி யது.

அதே ஆண்டு அதே மாதம் இந்தியா வுக்கான தற்காலிக வைசிராய் ஜான் கோல்வில்லே, தனது நிர்வாகக் கவுன்சி லில் பின்வரும்முடிவுகளை எடுத்துள்ள தாக இங்கிலாந்து அரசின் மந்திரி அம் ரேவுக்கு எழுதினார். ''இராணுவ ஆயு தத்தளவாடத்தொழிற்சாலைகள், பொது மக்கள் நிறுவனங்கள் மற்றும் இர யில்வே மட்டும் இல்லாமல் தேசிய முக் கியத்துவமுடைய அடிப்படைத் தொழில்களுக்கு தனியார் மூலதனம் போதிய அளவு வராதபட்சத்தில் தேசிய நலன்களுக்கு இன்றியமையாதவை என்று கருதப்படும் தொழில்களை முன் னேற்றுவதற்காக அவற்றை தேசவுடை மையாக்க வேண்டும். விமானங்கள், மோட்டார் வாகனங்கள், டிராக்டர்கள், இரசாயனங்கள், வார்ப்படங்கள், இரும்பு, எஃகு, கனரக இயந்திரங்கள், போக்குவரத்து வாகனங்கள், மின் இயந் திரங்கள், இயந்திரக் கருவிகள், மின்னி யல் இரசாயனங்கள் மற்றும் இரும்பு அல்லாத உலோகத் தொழில்கள் போன் றவை அத்தகைய (தேசவுடைமையாக் கக்கூடிய) அடிப்படைத் தொழில்கள் என்று வரையறுக்கலாம்.''

## காங்கிரசு சோசலிசத்தின் தொப்புள்கொடி உறவு

இந்தியாவின் காலனிய எஜமானர் கள் வகுத்த இந்தத் தொழிற்கொள்கை, நேரு - இந்திராவின் ஜனநாயக சோசலி சத்தை ஒத்திருப்பது மிகவும் கவனிக்கத் தக்கது. காலனிய அரசாங்கத்தின் தொழிற்கொள்கை ''சோசலிச குணாதிச யங்களைக் கூடக் கொண்டிருந்தது'' என்று கூறும் பொருளாதாரத் திறனாய் வாளர் எச்.ஹான்சன் 1945 அரசாங்கத் தொழிற்கொள்கை அறிவிக்கைக்கும் (சு தந்திரத்திற்குப் பிறகு) 1948 மற்றும் 1956 தொழிற்கொள்கை தீர்மானங்க ளுக்கும் கொஞ்சங்கூட வேறுபாடு கிடையாது. சுதந்திர இந்தியாவின் அர சாங்கத்துக்கு தொழில் வளர்ச்சிக்கான வழிகாட்டியாக அது இருந்தது'' என் றார். மைக்கேல் கிட்ரேன் என்ற இன் னொரு திறனாய்வாளர், ''சுதந்திரத்துக் குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட பல நட வடிக்கைகளுக்கு முன்னோடியாக அந் தக் காலகட்ட நடவடிக்கைகள் அமைந் தன'' என்றார்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுப்பது; அரசுத்துறை, தனியார்துறை மற்றும் கூட் டுத்துறையில் பல்வேறு அடிப்படைத் தொழில்களையும், சேவைப்பணிகளுக் கான நிறுவனங்களையும் அரசே நடத்து வது போன்ற கலப்புப் பொருளாதார ஒழுங்கமைப்பை நிறுவியது; நாட்டின் இன்றியமையாத தொழிற்துறைகளை தேசவுடைமை, பொதுத்துறையாக்கு வது, ''லைசென்சு - கோட்டா - ஒதுக்கீடு'' ஆகிய கட்டுப்பாடுகள் மூலம் நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் அரசேகட்டுப்படுத்துவது ஆகிய இவை யெல்லாம் காங்கிரசின் சோசலிச நடவ

பட்டினிச் சாவை நோக்கித் தள்ளப்பட்டுள்ள ஒரிசாவின் காளகந்தியைச் சேர்ந்த பழங்குடியின மக்கள்.




படிப்பகம்

www.padippakam.com



தில்லியில் உள்ள ஒரு தொழிலாளர் குடியிருப்பு: ஒளிரும் இந்தியாவில் அடுக்குமாடிக் கட்டிடத் தொழில் கொழிக்கிறது. தொழிலாளர்களின் குடியிருப்பு சுகாதார வசதி ஏதுமின்றி குப்பைத் தொட்டியாகிறது.

டிக்கைகள் என்று போலி கம்யூனிஸ்டுகள் ஆதரித்தனர். அமெரிக்க ஏகாதிபத்திய அடிவருடியும் பார்ப்பன அரசியல் குருவுமான இராஜாஜி தலைமையிலான சுதந்திரா கட்சியும் ஆர்.எஸ்.எஸ். -இன் பா.ஜ.க.வின் முன்னோடி ஜனசங்கம்கட்சியும்எதிர்த்துவந்தன.

உண்மையில்இவையெல்லாம்ஆங்கிலேயக் காலனியவாதிகளும், இந்தியத் தரகு முதலாளிகளும் தத்தமது ஆதிக்கம் சுரண்டல் நலனுக்காக இணைந்து வகுத்து, அமலாக்கியவை. இந்திய அரசின் திட்டமிடுதல் மற்றும் வளர்ச்சித் துறை செயலாளராகவும் 1944-46 ஆண்டுகளில் இருந்து, பின்னாளில் ரிசர்வ் வங்கி ஆளுநரான எச்.வி.ஆர். ஐயங்கார், ''இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு மாதிரியாக பம்பாய் திட்டம் அமைந்தது'' என்றார். மேலும் ''பொருளாதாரத்தில் அரசின் பெருமளவு தலையீடு தனியார் மற்றும் பொதுத்துறைத் தொழில்களின் கலப்பு, கனரகத்தொழிலுக்குஅழுத்தம்கொடுப்பது; அந்நிய மூலதனம் மற்றும் பற்றாக்குறை பட்ஜெட் ஆகியவற்றின் அவசியம் முதலிய கருத்தோட்டம் எல்லாம் பம்பாய் திட்டத்திலேயே இருந்தது. உண்மையில் பம்பாய்த் திட்டத்தின் அடிப்படைஅணுகுமுறைக்கும்இந்திய அரசாங்கத்திட்டக்கமிசனின்அணுகுமுறைக்கும் மிகமிகச் சொற்பமான வேறுபாட்டையே நான் காண்கிறேன். பம்பாய்த் திட்டத்திலிருந்துதான் உண்மையில் உற்சாகம் பெற்றது என்றால் மிகையாகாது''என்றார்.

பம்பாய்த் திட்டத்தை உருவாக்கியவர்களில் ஒருவரும், 1946-47-இல் அமைக்கப்பட்ட இந்திய இடைக்கால அரசிலும், அதன்பிறகு வந்த நேரு அரசாங்கத்திலும்மந்திரியாகஇருந்தவரும் நேருவின்நெருங்கிய ஆலோசகர்-நண்பருமானஜான்மத்தாய், ''சமுதாயத்திட்டங்கள் தவிர முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொழில் திட்டமும் இந்திய தேசிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வருவதற்கு, முன்பாகவே அதாவது காலனிய ஆட்சியிலேயே வடிவமைக்கப்பட்டு பகுதியளவுக்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தன'' என்றார்.

அடுத்தடுத்து வந்தஐந்தாண்டுத்திட்டங்களும் ஆங்கிலேய ஏகாதிபத்திய அரசுக்கு விசுவாசமான இந்திய சிவில் சர்வீஸ் (ஐ.சி.எஸ்.) அதிகாரிகளின் தலைமையில் வகுக்கப்பட்டு, அமலாக்கப்பட்டன. காலனிய அரசின் மூத்த ஐ.சி.எஸ். அதிகாரியான வி.டி.கிருஷ்ணமாச்சாரிதான் 1953 முதல் 1960 வரை திட்டக்கமிசன் துணைத்தலைவராக இருந்தார். உறுப்பினர்களாக இருந்தவர்களும் ஐ.சி.எஸ். அதிகாரிகளே. இப்போதும் இந்திய அரசின் திட்டமிடுதல், நிதி, வர்த்தகம், தொழிற்துறைக்குத் தலைமை வகிப்பவர்கள் அந்த ஐ.சி.எஸ். அதிகாரிகளின் வாரிசுகளும் அவர்களிடம் பயிற்சி பெற்றவர்களான ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும்தான். இவர்கள் போதாதென்று திட்டக்கமிசன் அமைக்கும் முயற்சிக்கே பின்னணியில் இருந்து செயல்பட்டவர் அமெரிக்க அரசு சார்பாக ஆசிய நாடுகளில் பணியாற்றிய அமெரிக்கப் பொறியியலாளர் சாலமோன் திரோன் மற்றும் அமெரிக்கத் தூதரான செஸ்டர் பௌல்ஸ் ஆகியோர்.

**காங்கிரசு சோசலிசத்தின் கள்ளக் குழந்தை: பசுமைப் புரட்சி**

ஏகாதிபத்தியக் காலனிய அடிமைத்தனத்தில் இருந்து விடுதலைபெறும் நாடு, தொழிற்துறையில் மட்டும் பொருளாதார ஒழுங்கமைப்பும் திட்டமிடுதலும் செய்தால் போதாது. விவசாயத்துறையிலும் அப்படிச் செய்தல் வேண்டும். காலனிய ஆட்சியில், நிலவுடைமை ஆதிக்கம் குறுநில மன்னர்கள், ஜமீன்தார்கள், மிட்டாமிராசுதார்கள், தாலுக்காதாரர் - ஜோத்திதார்களிடமிருந்தது. வரிவசூலித்துக்கொள்வதில்கடுமையாக நடந்து கொண்ட ஆங்கிலேய அரசு, நிலவுடைமைச் சீரமைப்பதிலும், நீர்ப்பாசன வசதிகளைப் பராமரித்துப் பெருக்குவதிலும் கிஞ்சித்தும் அக்கறை காட்டவில்லை. இதனால் விவசாயம் நலிவடைந்து பஞ்சம், வறட்சி, பட்டினிச் சாவுகள், கொள்ளை நோய்கள் பரவி கோடிக்கணக்கில் மக்கள் செத்துமடிந்தனர். தொழிற்துறையில் மட்டுமே கவனம் செலுத்திய பம்பாய்த் திட்டமும், காலனிய அரசின் தொழிற்கொள்கை அறிவிக்கைகளும்விவசாயத்துறையை முற்றாகப்புறக்கணித்தன.

1949-இல் சீனப்புரட்சி விவசாயிகளை முதுகெலும்பாகக் கொண்டு வெற்றிபெற்று, நிலப்பிரபுக்கள்ஒழிக்கப்பட்டு, நிலவுடைமை மறுபங்கீடு மூலம் திருத்தி அமைக்கப்பட்டதும், தெலுங்கானாவில் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான விவசாயிகளின் ஆயுதந்தாங்கிய புரட்சி - எழுச்சியும் ஆட்சியாளர்களுக்குப் பீதியூட்டின. இதன் விளைவாக ஜமீன்தாரி - இனாம்தாரி முறைகள் ஒழிப்பு போன்ற சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், ஐந்தாண்டுத் திட்டங்களில் பல நீர்பாசனத் திட்டங்கள் புகுத்தப்பட்டாலும், நிலவுடைமைஉறவுகளில்பெரும்மாற்றம்எதுவும் நடந்துவிடவில்லை. குறுநில மன்னர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் நட்ட ஈடுவழங்கப்பட்டது. நிலப்பிரபுக்களிடம் நிலம் குவிந்து கிடப்பதில் மாற்றம்நிகழவில்லை.

ஏகாதிபத்தியக் காலனிய மூலதனத்தைப் பறிமுதல் செய்யாது பாதுகாக்கப்பட்டதைப்போலவே, நிலப்பிரபுத்துவமும் பாதுகாக்கப்பட்டது. விவசாயிகளை பண்ணை அடிமைமுறை, குத்தகைமற்றும்கொத்தடிமைமுறைச்சுரண்டலில் இருந்து விடுவிக்கவில்லை. அப்படிச் செய்து விவசாயிகளின் உற்பத்தி, வாங்கும்சக்தியையும் மூலதனச்சேமிப்பையும் பெருக்கும் ஒட்டு மொத்தப் பொருளாதார மறு ஒழுங்கமைப்பு நடக்கவில்லை. நட்டஈடாகப் பெற்ற பெருந்தொகை மற்றும் புதிய நீர்பாசன வசதிகள்ஆகியவற்றைவைத்துநிலப்பிரபுக்களின் சுரண்டலும் ஆதிக்கமும் மேலும் இறுகியது.



படிப்பகம்

www.padippakam.com

அந்நியஏகாதிபத்தியமூலதனம்மற்றும் இந்தியத்தரகு முதலாளிகளின் கூட்டுக் கொள்ளை காரணமாக 1965-இல் கடும் பொருளாதார நெருக்கடி, அன்னியக் கடன்சுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம் - விலைவாசி ஏற்றம், உணவுப் பற்றாக்குறை - பஞ்சம்-பட்டினிச் சாவுகள் தலைவிரித்தாடின. உணவுக்கும் அந்நியக் கடனுக்கு வட்டி கட்டவுமே அமெரிக்காவிடம் பிச்சை யெடுக்கும்படி இந்திய அரசுதள்ளப்பட்டது. இதையே ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்கா மற்றும் பிற அந்நிய ஏகபோகங்களின் உரம், பூச்சி மருந்து, உயர்ரக விதைகள், விவசாய இயந்திரங்களுக்கான சந்தையை விரிவாக்கிப்பயன்படுத்திக்கொள்ளும் நோக்கில் பசுமைப்புரட்சிதிணிக்கப்பட்டது. இந்திய ரூபாயின் மதிப்பைக் குறைத்து, அமெரிக்க டாலர் ஆதிக்கம் நிறுவப்பட்டது.

இந்தப் பசுமைப்புரட்சியால் ஏற்கெனவே நீர்ப்பாசன வசதிமிக்க சில மாவட்டங்களில் விவசாய உற்பத்தி பெருகியது உண்மைதான். இது நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகளின் செல்வத்தைப் பெருக்கி, உணவுக் கிடங்குகள் நிரம்பின. ஆனால் கூலி, ஏழை விவசாயிகளின் வாழ்வு முன்னேறவோ, வாங்கும் சக்தி அதிகரிக்கவோ வழிவகுக்கவில்லை. விவசாயிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டம் கூடிக் கொண்டே போனது. தொழிற்துறையில் ஒரு தேக்கம் ஏற்பட்டது. அந்நியக் கடன்சுமை எகிறியது. ஒட்டு மொத்தப் பொருளாதாரமும் பணவீக்கம் - தேக்கநிலையை எட்டியது. ஐந்தாண்டுத் திட்டங்கள் படுதோல்வியடைந்தன. குறிப்பாக, ஆறாவது ஐந்தாண்டுத்திட்டம் ஏழாண்டுகளாகியும் இலக்கை எட்டாமல் நின்றுபோனது. நாட்டின் பொருளாதார நெருக்கடி கடுமையாகியது.

### இன்னொருகள்ளக்குழந்தை: புதிய பொருளாதாரக்கொள்கை

1960-களின் முதல் பாதியிலேயே இந்திரா அரசு உலகவங்கி மற்றும் ஐ.எம்.எஃப் கடன்கோரிப் பிச்சையெடுத்தது. 5000 கோடி டாலர் கடன்பெற்ற இந்திய அரசு ஏகாதிபத்திய நிபந்தனைகள் - கட்டளைகளை ஏற்று நாட்டை மறுகாலனியாக்கும் - மறு அடகுவைக்கும் கட்டளைகளை ஏற்க வேண்டியதாகியது. அதன்பிறகு "காட்" (GATT) ஒப்பந்தத்துக்கான பேச்சு வார்த்தைகள் தொடங்கின. நாடாளுமன்ற - சட்டமன்ற ஒப்புதலின்றியே இரகசியமான முறையில் இந்திய அரசு "காட்" ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்கிற புதிய பொருளாதாரக்கொள்கையும் அதன் அடிப்படையிலான பொருளாதாரக் கட்டுமான மறுசீரமைப்பும் அமலுக்குவந்தது.



வல்லரசாகப் போகும் இந்தியாவில், மூங்கில் கூடைகளைப் பின்னி விற்றுக் காலந்தள்ளும் சபார் பழங்குடியின மக்கள்.

இதைநியாயப்படுத்துவதற்காகஒரு மோசடியான வாதம் முன்வைக்கப்பட்டது: சோவியத்ஒன்றியத்தின்தலையீடு, உதவி, பாதிப்பு காரணமாக முன்பு புகுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களும், அரசுத்துறை - பொதுத்துறைத்தொழில்களும் அடங்கிய மையப் பொருளாதார ஒழுங்கமைப்பு இனிமேலும் இந்நாட்டு வளர்ச்சிக்குப் பொருந்தாது. மாறிய உலகப் பொருளாதார நிலைமைகள் காரணமாகவும் புதிய முதலீடுகளுக்காகவும் தொழில்நுட்பத்துக்காகவும் கொண்டு வரப்படும் பொருளாதாரக் கட்டுமான மறுசீரமைப்புக் கொள்கையின்படி, அரசுத்துறை - பொதுத்துறைத் தொழில்களைத் தனியாருக்கு விற்றுவிட வேண்டும். கல்வி, சுகாதாரம், மருத்துவச் செய்தித் தகவல் - தொலைத் தொடர்பு, போக்குவரத்து, அடிப்படைக் கட்டுமானம் ஆகியவற்றில் இருந்து குடிநீர், கழிவுநீர் அகற்றுதல் கழிப்பிடம் உட்பட அனைத்தும் தனியாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அந்நிய, ஏகாதிபத்திய, பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் மூலதனம் போட்டுத் தொழில் தொடங்கவும், தமது உற்பத்திப்பொருட்களைவிற்பதற்கும், கோடிகோடியாகக் கொள்ளையடிப்பதற்கும் இருந்த இடையூறுகள் அனைத்தையும் முற்றாக அகற்றிவிட வேண்டும். மொத்தத்தில் பொருளாதாரத்துறையில் அரசுத்தலையீடும், கட்டுப்பாடும் முற்றாக ஒழிக்கப்படவேண்டும். இந்த வகையில் நாட்டின் பொருளாதாரம் மறு ஒழுங்கமைப்பு - மறுசீரமைப்பு செய்ய வேண்டும். இதைதான் புதிய பொருளாதாரக் கொள்கை என்கின்றனர்.

பழைய பொருளாதாரக் கொள்கை என்பது இந்தியத் தரகு முதலாளிகளின் பம்பாய்த் திட்டமும் ஆங்கிலேய காலனி அரசின் தொழிற்கொள்கை அறிவிக்கைகளும் அடங்கியவை. புதிய பொருளாதாரக் கொள்கை என்பது அமெரிக்க ஆதிக்கத்தில் உள்ள உலக வங்கி - ஐ.எம்.எஃப். மற்றும் உலக வர்த்தகக்கழகம் ஆகியவற்றால் திட்டமிட்டு, மேற்பார்வையிடப்படும், நேரடியாக இயக்கப்படும் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் அடிப்படையிலானது.

இந்திய நாட்டின், அதிலடங்கிய மாநிலங்களின் திட்டக் கமிசன்கள், அமைச்சரவையின் ஆண்டு வரவு - செலவு கணக்குகள், ஐந்தாண்டுத் திட்ட வரைவுகள் - இவை அனைத்துமே உலக வங்கி மற்றும் ஐ.எம்.எஃப் நிறுவனம் ஆகியவற்றின் அதிகாரிகளின் நேரடி வழிகாட்டுதல், மேற்பார்வையில்தான் தயாரிக்கப்பட்டு அமலாகின்றன. மத்திய - மாநில அமைச்சகங்கள், அவற்றின் கீழுள்ள பல்வேறு துறை அதிகாரிகளும் அவற்றுக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பித்து, வழிகாட்டுதல்கள் பெறுகிறார்கள். மின்கட்டண உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு, ரேசன் அரிசி விலை உயர்வு ஆகிய அனைத்து



படிப்பகம்

www.padippakam.com

மக்கள் விரோதப் பொருளாதாரச் செயல்களும் உலகவங்கி உத்திரவுப் படித்தான் செய்ய வேண்டியிருககிறது என்றுஜெயலலிதாபகிரங்கமாகஒப்புக் கொள்கிறார். உலகின் மிகப்பெரிய ஏக போகப் பணக்காரன் - கணினித் துறை முதலாளிபில்கேட்ஸ்நேரடியாகவேசந் திரபாபு நாயுடு, எஸ்.எம். கிருஷ்ணாவு டன் பேசி ஐதராபாத்திலும் பெங்களூரி லும் தொழில் தொடங்குவது பற்றி முடி வெடுக்கின்றனர்.

ஆக, முன்பு ஆங்கிலேயக் காலனியவாதிகளும் இந்தி யத் தரகு முதலாளிகளும் வகுத்த அமலாக்கிய பொருளாதார ஒழுங்கமைப் பையும் திட்டமிடுதலையும் தான் நேரு - இந்திரா பரம் பரை ஆட்சியும் அதிகாரிக ளும் விசுவாசமாக பின்பற்றி வந்தனர். இன்று உலகவங்கி, ஐ.எம்.எஃப், உலக வர்த்தக் கழகம் ஆகிய ஏகாதிபத்தியம் ஆதிக்கம்வகிக்கும்நிறுவனங் களின் அதிகாரிகள் வகுத்துக் கொடுத்துள்ள புதிய பொருளாதார - மறுசீரமைப் புக் கொள்கை அவர்களின் நேரடி வழிகாட்டுதல் மேற் பார்வையி அமலாக்கப்படுகி றது.

இப்போது அவர்கள் பின் வருமாறு வாதிடுகின்றனர். ''நாட்டின் பொருளாதார நட வடிக்கைகளில் அரசு தலை யீடுசெய்வதும்கட்டுப்படுத்து வதுமாகிய மையப்படுத்தப் பட்ட பொருளாதார ஒழுங்க மைப்பு சோவியத் ஒன்றியத் தில் ஏற்பட்டதைப் போன்ற தேக்கநிலை, நெருக்கடியைத் தான் கொண்டு வரும். சோவி யத் ஒன்றியத்தின் வீழ்ச்சி, மையப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தின்வீழ்ச்சியைக்குறிக்கிறது. கட்டுப்பா டுகளற்றசுதந்திரச்சந்தைதான்மிகச்சிறந் தது; அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் போன்ற நாடுகளிலுள்ள சுதந்திரச் சந் தைப் பொருளாதாரம் மட்டுமே நீடித்த வளர்ச்சியைப்பெறமுடியும்''என்கிறார் கள்.

''ஏற்கெனவே, இந்தியாவில் உள்ள அரசு, பொதுத்துறை தொழில்களைத் தனியார்மயமாக்கி, தனியார்துறைக்கு அந்நிய முதலீட்டிற்கும் உள்ள தடை களை அகற்றினால்தான் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்; புதிய தொழில் கள் தொடங்கவும், உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளவும், ஆட் குறைப்போ, ஆலைமூடலோ எதுவும் செய்யலாம் என்று தாராளமயமாக்கி உலகத்தரத்துக்கு உற்பத்தியை வளர்ப்ப துதான் நெருக்கடிகளைத் தீர்க்கும்'' என்றுகூட வாதிடுகின்றனர்.

தனியார்மயம் - தாராளமயம் - உல கமயம் என்ற இந்தப் பொருளாதார ஒழுங்கமைப்பின் கீழ் சாலையில் பய ணம் செய்யும் உரிமை முதல் இயற்கை யானகுடிநீர்நிலைகள்கூடதனியார்மய மாக்கப்படும். எல்லாவற்றுக்கும் கட்ட ணம் வசூலிக்கப்படும். நமது வேம்பு, மஞ்சள் கூட அமெரிக்க, ஜெர்மன் கம் பெனிகளின்வடிவுரிமைஎனபதிவுசெய் யப்பட்டு, கட்டணம்வசூலிக்கப்படும்.

இந்த இலட்சணத்தில் இந்திய வாக் காளர்களின் கோரிக்கைகளை ஓட்டுக் கட்சிகளால்நிறைவேற்றமுடியுமா? ஓட் டுக் கட்சிகளுக்கு வேண்டுமானால் வாக்காளர்களின் ''தயவு'' தேவையாக இருக்கலாம். ஆனால், நமது பொருளா தாரத்தை ஏகபோகமாகக் கட்டுப்படுத் தும் தரகு அதிகார முதலாளிகளுக்கும், ஏகாதிபத்தியப் பன்னாட்டு நிறுவனங்க ளுக்கும் தேவை - நுகர்பொருட்களை வாங்கிக் குவிக்கும் வசதிகொண்டவர் கள் மட்டும்தான்.



**உத்திரப் பிரதேச மாநிலத்தில் உருளைக்கிழங்கிற்கு உரிய விலை கிடைக்காததால் நிலத்திலேயே கொட்டி அழிக்கப்படுகிறது: ஒருபுறம் அபார விளைச்சல்; இன்னொருபுறம் பட்டினி இந்தியா - ''இந்தியா ஒளிர்கிறது!''**

இந்தியாவின் நூறுகோடி மக்கள் தொகையில் ஒரு 10, 15 கோடி மக்கள் தாம், 25 கோடி குடும்பங்களில் ஒரு 5 கோடி குடும்பங்கள்தாம் - இவர்களே உலகில் பெரிய சந்தைகளில் ஒன்றாக அமைகிறார்கள். இவர்களுடைய தேவைகள், இரசனைகள், விருப்பங்க ளுக்கேற்பசரக்குகளைஉற்பத்திசெய்வ தும் விற்பதும் மட்டுமே குறியாகக் கொண்டதுதான் இன்றைய பொருளா தார ஒழுங்கமைப்பு. மற்றவர்கள் எக் கேடு கெட்டும் போகட்டும். எங்களுக்குக் கவலையில்லை என்று எண்ணுபவர்கள்தாம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள்.

அதனால் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே தள்ளப்படும்போதும், ஒரு சிறு பகுதியினரின் வாழ்க்கை வளமடைந்து வருவதையே இந்தியா ஒளிர்கிறது, மிளிர்கி றது என்று கூறி எக்காளமிடுகி ன்றனர். 13 வகை கார்கள் சந் தைக்கு வந்துள்ளன; 2.8 கோடி ''செல்ஃபோன்கள்'' விற்றுள்ளன; நான்கு வழிச்சா லைகள் அமைக்கப்படுகின் றன; மாதாமாதம் இலட்சக்க ணக்கான இரண்டு சக்கர வாக னங்களை ஒரு கம்பெனியே விற்கிறது; ஏராளமான பேர் வங்கிக் கடன் அட்டையைப் பயன்படுத்துகிறார்கள்; கணி னித் தொழிலில் பல லட்சம் பேருக்குவேலைகிடைக்கிறது என்று - புதிய பொருளாதாரக் கொள்கையின் மகிமையைப் பாடுகின்றனர்.

ஆனால், வற்றாத கட லெனப் பன்னாட்டுக் கம்பெ னிகள் நம்பிவந்த இந்தியச் சந்தை விரைவிலேயே பூரிதநிலையை எட்டியது. வானொளி, குளிர்பதனப் பெட்டிகள், சலவை எந்திரங்கள், குளுகு ளுப்பூட்டும் இயந்திரங்கள் மற்றும் பல மின்னணு சாதனங்களைக் கூவிக் கூவி விற்கிறார்கள். ஒன்று வாங்கினால் மற் றது இலவசம் என்று கார்களும் வாகனங் களும் வீடுகளும் வட்டியின்றித் தவணைமுறையில் விற்கப்படுகின்றன. பெருமளவு நுகர்வுக் கடன்களை போதிய உத்திரவாதம் இல்லாமல் தரு கின்றனர். இதன் அடுத்தநிலை உபரி உற் பத்தியிலும்தேக்கமும் என்கிறசுதந்திரச் சந்தைப் பொருளாதாரத்தின் தவிர்க்க முடியாத நெருக்கடிதான். இந்தப் போக்கு மெக்சிகோ, பிரேசில்,


படிப்பகம்

www.padippakam.com

இந்தோனேசியா என்று அடுத்தடுத்த நாடுகளில் பொருளாதார திவால்நிலைக்குத் தள்ளுவதைப் போல இங்கும் வரும். இதனால் இந்தியா இன்னொரு வல்லரசாகும் என்கிற கனவு கலைந்து விரைவிலேயே இன்னொரு திவாலா நாடாகும்.

**சந்தைப்பொருளாதாரமும் மையப்பொருளாதாரமும்**

சுதந்திரச் சந்தைப் பொருளாதாரம் என்பது உழைப்பாளர்கள், நுகர்வோர் மற்றும் சரக்கு உற்பத்தி செய்து விற்கும் முதலாளிகள் அனைவருக்கும் சம வாய்ப்பளிக்கும் ஜனநாயக ரீதியிலான இயற்கைப் பொருளாதாரம் என்று புளுகித்தள்ளுகிறார்கள். அதாவது வாங்குவோரின்தேவையைப் பொருத்தும் மலிவாகவும் தரமாகவும் உற்பத்தி செய்தால் தான் முதலாளிகள் தொழிலில் நீடித்திருக்க முடியும். இதற்காக முதலாளிகளுக்கு மத்தியில் நடக்கும் சந்தைப் போட்டி, விலையையும் தரத்தையும் பராமரிக்கும்படி கோருகின்றன. தரமற்ற, விலை உயர்வான சரக்கை வாங்குவோர் நிராகரிப்பார்கள் என்பதால் இயற்கையாக அவற்றை உற்பத்தி செய்யும் முதலாளிகள் போட்டியிலிருந்து வெளியே தள்ளப்படுவார்கள். அதைப் போலவே உழைப்பாளரும் தமது உற்பத்தித் திறனைக் கொண்டுதான் உழைப்புச் சந்தையில் நிற்க முடியும். இந்த வகையில் சந்தையே எல்லாவற்றையும் தீர்மானிக்கும் சக்தி படைத்தது; இதற்கு மாறாக அரசுத் தலையீடுகள் கூடாது என்பதுதான் சுதந்திரச் சந்தைப் பொருளாதாரத்தின் அடிப்படை.



சத்தான உணவு கிடைக்காமல் மரணத்தோடு போராடும் விஜயவாடா நகரைச் சேர்ந்த குழந்தை: ''ஹை-டெக்'' முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆட்சியின் இலட்சணம்.

ஆனால், நாட்டுக்கும் மக்களுக்கும் என்ன தேவையோ அதற்கான முதலீடுகளைக் குவித்து உற்பத்தியை பெருக்கி அதற்குப் பதிலாக மேட்டுக் குடித் தேவைகளுக்காக கொள்ளை லாபம் தரக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்து சந்தையில் குவிப்பது, விளம்பரம், ஏகபோகம் ஆகியவற்றை வைத்து மோசடிகளும் நடக்கின்றன. சான்றாக மலிவான சைக்கிள், ஆடை, மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்கு பதில் மேட்டுக்குடியினர் அதிகம் பாவிக்கும் கார்கள், அழகு சாதனங்கள், ஃபாஷன் உடைகள், தயார்நிலை உணவுகள் உற்பத்தியில்தான் அதிக முதலீடு செய்யப்படுகிறது. இதனால் விரைவில் சந்தையில் தேக்கமும் பொருளாதார நெருக்கடிகளும் முற்றுகின்றன.

சுதந்திர சந்தைப் பொருளாதாரம், தடையற்ற, தொய்வற்ற சந்தைவிரிவாக்கத்துக்கான ஏகாதிபத்தியப் போட்டிக்கும் போருக்கும்தான் வழிவகுக்கும் என்பதை இரண்டு உலகப் போர்களிலும் கண்டோம். இன்றும் ஆப்கான், ஈராக் என்று பலநாடுகளின் மீது ஆக்கிரமிப்பு அழிவுப்போர்களுக்கு அது காரணமாகஇருப்பதைக்காண்கிறோம்.

மேலும் சுதந்திரப் பொருளாதாரச் சந்தை என்பதே ஒரு மிகப்பெரிய மோசடி. கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அது மறைந்துவிட்டது. ஏகாதிபத்திய ஏகபோகம் அதனிடத்தைப் பிடித்துக் கொண்டு ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. சான்றாக, நாட்டிலிருந்த பலநூறு குளிர்பானக் கம்பெனிகளைபெப்சி, கோக்ஆகிய இரண்டு பன்னாட்டு நிறுவனங்களே எடுத்து விழுங்கிவிட்டன. இந்த இரண்டு ஏகபோக நிறுவனங்களும் நஞ்சையே விற்பனைசெய்கின்றன என்று அறிந்தும் அவற்றை தடை செய்ய ஆட்சியாளர்கள் முன்வரவில்லை. மாற்றாக, போட்டியாக எந்த குளிர்பான நிறுவனமும் எழுந்து நிற்க முடியவே இல்லை. இதுதான் உலகமயமாக்களின்விளைவு.

மேலும் இந்த ''ஏகபோக'' சுதந்திரச் சந்தைப் பொருளாதாரம், நாட்டின் கோடானுகோடி மக்களுக்கு எவை தேவையோ அவற்றை பெருமளவில் உற்பத்தி செய்வதில்லை. அதற்கு மாறாக கொள்ளை இலாபமடிக்கக் கூடிய தொழில்களையே தொடர்ந்து நடத்தி வருகின்றன. இது ஒவ்வொரு நாட்டிலும் உலகளவிலும் கூடுதலான நெருக்கடிக்கே இட்டுச் செல்லும்.

வேலை வாய்ப்புக்கு அழுத்தம் தரும் தொழில்களுக்குப் பதில் அதிஉயர் தொழில்நுட்பத்துக்கும் கொள்ளை இலாபத்துக்கும் வழிவகுக்கும் தொழில்களுக்கு மட்டுமே ஒவ்வொரு தொழிற்குழுமங்களும் நன்கு திட்டமிட்டு செயல்படும் அதேசமயம் இந்தப் பொருளாதாரக் கட்டமைப்பு முழுவதும் அராஜக உற்பத்தி-பொருளாதாரத்துக்குள் இழுத்துவிடப்படுகிறது. இதற்கு நேர்மாறாக சுயசார்பு, சுய தேவை, பெரும்பான்மை மக்களுக்கான வேலை மற்றும் தேவைகளை முன்னிறுத்தும் சோசலிச மற்றும் மையப் பொருளாதாரத் திட்டமிடுதல் மட்டுமே பொருளாதார நெருக்கடிகள் அனைத்துக்கும் தீர்வாகஅமையமுடியும்.

இவ்வாறு, நாட்டின் பொருளாதார ஒழுங்கமைப்பு மற்றும்திட்டமிடும்முறையை அடியோடு மாற்றி அமைப்பதற்கு பதிலாக பொய்யான வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு ஓட்டுக்களைப் பொறுக்கிக் கொண்டு போகின்றவைதான்எல்லாஓட்டுக்கட்சிகளும்.

எனவே, இவை எதுவும் வாக்காளர்களின் அடிப்படையான, நிரந்தரமான கோரிக்கைகளையோ, தத்தமது வாக்குறுதிகளையோ கூட நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை, திட்டங்களை, நடைமுறைகளைக் கொண்டிராதவை. பிறகெதற்கு ஓட்டுப் போட்டு நம்மை நாமேஏமாற்றிக்கொள்ளவேண்டும்?

● மாணிக்கவாசகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

- *ஈழம் என்றால் புலிகள்! புலிகள் என்றால் ஈழம்!*
*வாய்ச்சவடாலுக்கு இப்படி வரிப்புலி வேஷம்.*
*இந்தியாவில் தேசிய இனங்களை ஒடுக்கும்*
*இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்ணான்டசிடம்*
*கூட்டணி கோஷம்.*
*'அம்புக்கு' பெர்ணான்டஸிடம் போனால்*
*இன உரிமையை ஒடுக்குபவரிடம்*
*எதற்குப் போனீர்கள்? என*
*எந்த தலித்தும் கேட்கமாட்டான் என்ற தெம்பு உங்களுக்கு.*
*இனி வில்லுக்கு வெங்கையா நாயுடுவிடம் போகலாம்.*

- *கர்த்தரிடம் காசு வாங்கி*
*கலைவிழா எதற்கு என்றோம்.*
*உடனே தலித் கலைவிழாவையே எதிர்க்கிறோம்*
*என தகிடுதத்தம் பேசுகிறீர்கள்.*
*''போப் புரட்சி செய்ய முடியாது'' என்பதை*
*புரிந்து கொண்டதால்தான்*
*அரசரடி பாதிரியார்களின் பாவத்தின் சம்பளத்தில்*
*ஆண்டுதோறும் தலித் கலைவிழா*
*நடத்துகிறீர்கள் போலும்!*

- *என்ன செய்வது!*
*சேரி மக்களை இழிவுபடுத்துபவர்கள்*
*தலித்தாக இருந்தால்*
*கழுக்கமாய் போய்விட வேண்டும் என்ற*
*உங்கள் தனிநபர் தலித்தியத்தை*
*எங்களால் ஏற்க முடியாது.*
*காரணம் நாங்கள் கம்யூனிஸ்டுகள்!*

- *சேரியில் எங்கள் அசுரகானம் ஒலிப்பதை*
*உங்களால் தடுக்க முடியாது.*
*காரணம் அவர்கள் உழைக்கும் மக்கள்.*
*பாராளுமன்ற பன்றித் தொழுவத்துக்குப் போக*
*யாரோடும் கூட்டு என*
*சாதிவெறியர்களோடு சங்கமிக்கும் தலித்தியவாதிகளே!*
*சேரிக்குள் நக்சல்பாரிகளை கண்டவுடன்*
*நீங்கள் சிவந்து போகும் மர்மமென்ன?*

- *ஆண்டைகள்தான் எங்களைப் பார்த்து*
*வாய் உளற கண்டிருக்கிறோம்*
*அட...! நீங்களுமா?*

● துரை.சண்முகம்
ம.க.இ.க.

# இந்துவெறியன் இராம.கோபாலன் படத்துக்கு செருப்புமாலை! சாணிச்சட்டி ஆரத்தி!

கடந்த 20.4.04 அன்று தேர்தல் பிரச்சாரம் என்ற பெயரில் ''இந்து விரோதிகளைத் தோற்கடிப்போம்!'' என்ற முழக்கத்துடன் இந்து முன்னணி சார்பாக தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக்கூட்டத்திற்கு இந்து முன்னணி தலைவன் இராம.கோபாலன் வருவதையறிந்த விவசாயிகள் விடுதலை முன்னணி, இப்பார்ப்பன பயங்கரவாதியை எதிர்த்து, ''வர்றாண்டா பயங்கரவாதி இராம.கோபாலன்'' என்ற தலைப்பில் பென்னாகரம் பகுதியெங்கும் சுவரொட்டிகளை ஒட்டியது. ''நாமெல்லாம் இந்து என்று சொல்லும் இராம.கோபாலனே, சக்கிலியரை சங்கராச்சாரியாக்கத் தயாரா? உழைக்கும் மக்களே, மதவெறியைத் தூண்டி மனித இரத்தம் குடிக்கும் பார்ப்பன இராம.கோபாலனுக்கு செருப்பு மாலை போட்டு, சாணிச் சட்டியை உடைத்து நமது பாரம்பரிய பார்ப்பன எதிர்ப்பை நிலைநாட்டுவோம்!'' என்ற முழக்கங்களைக் கொண்ட இச்சுவரொட்டிகளை, உடனடியாக கிழிக்குமாறு போலீசு கெடுபிடி செய்தது. பார்ப்பன - இந்துவெறியர்களை எதிர்ப்பது எமது கொள்கை; அதில் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் என்று தோழர்கள் உறுதியாகநின்றனர்.

இச்சுவரொட்டிகள் உழைக்கும் மக்களிடம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டது. இதைக் கண்டு பீதியடைந்த போலீசு அதிகாரிகள், பிற ஊர்களிலிருந்து பெரும்படையாக போலீசாரைக் கொண்டுவந்து குவித்தனர்.

இராம.கோபாலன் மாலை சுமார் 5 மணிக்கு வருவதாகத் தெரிந்ததும், அதற்கு முன்பாக மாலை சுமார் 4.30 மணியளவில் வட்டார வளர்ச்சி அலுவலகம் அருகில் - மக்கள் அதிகமாகக் கூடுமிடத்தில் இராம.கோபாலனின் உருவப் படம் கொண்ட பெரிய தட்டியை வி.வி.மு. தோழர்கள் கொண்டு வந்து வைத்தனர். ''இந்துவெறியன் இராம.கோபாலனுக்கு வரவேற்பாக எங்களின் செருப்பு மாலை!'' என்று எழுதி வைத்து இராம.கோபாலன் படத்துக்கு பெரும் ஆரவாரத்துடன் தோழர்கள் செருப்பு மாலை அணிவித்தனர். பின்னர், ஒரு சட்டியில் சாணியைக் கரைத்து ஆரத்தி எடுத்து ''இந்து என்று சொல்லாதே! பார்ப்பான் பின்னே செல்லாதே!'' பார்ப்பன இந்துமதவெறியை முறியடிப்போம்! என்று முழக்கமிட்டு, அந்த சாணிச் சட்டியை தெருவில் போட்டு உடைத்தனர். பொதுமக்கள் பெருந்திரளாகக் கூடி ஆதரித்து வரவேற்றனர்.




சிறிதுநேரம் கழித்து, போலீசார் வந்து அந்த தட்டியைக் கழட்டி எடுத்துச் சென்றனர். பொதுக் கூட்டத்தில் ஐந்து நிமிடங்களே 'சிறப்புரை' ஆற்றிவிட்டு இராம.கோபாலன் ஓடி விட்டார். இந்த 'மாபெரும்' பொதுக்கூட்டத்துக்கு திரண்டு வந்தவர்கள் 20-25 பேர்தான். இந்தக் கூட்டத்துக்கு பாதுகாப்பளிக்க வந்த போலீசாரின் எண்ணிக்கையோ இருநூறுக்கும் மேல்! அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப் போன இந்துவெறியர்கள், ஆத்திரமடைந்து தமது அதிகார பலத்தைக் கொண்டு போலீசை ஏவி அன்று நள்ளிரவில் முன்னணித் தோழர்களைக் கைது செய்து பொய்வழக்கு போட்டுள்ளனர்.

இராம.கோபாலன் வருகையை எதிர்த்து, செருப்பு மாலை போட்டுச் சாணிச்சட்டி உடைத்த செயலானது. பத்திரிகைகளில் பரபரப்பு செய்தியாக வெளியாகி, இந்துவெறியர்களை மேலும் அவமானப்படுத்தி தனிமைப்படுத்தியுள்ளது. வி.வி.மு.வின் போர்க்குணமிக்க நடவடிக்கையால் உற்சாகமும் நம்பிக்கையும் அடைந்துள்ள உழைக்கும் மக்கள், இனி இராம.கோபாலன் இங்கு வந்தால் அவனுக்கு செருப்பு மாலை போட்டு சாணிச் சட்டியை அவன் தலையில் போட்டு உடைப்போம் என்று உறுதியளித்தனர்.

*— விவசாயிகள் விடுதலை முன்னணி*
*பென்னாகரம்.*

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com




# ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!




திருச்சி மாநகரில் இயங்கிவரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி (பு.மா.இ.மு.) நாடாளுமன்றத் தேர்தல்களையொட்டி நடத்தி வரும் தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்தின் ஒரு அங்கமாக, திருச்சி நகரில் செந்தண்ணீர்புரத்திலும், காந்திபுரத்திலும் தேர்தல் புறக்கணிப்பு அலுவலகங்களைத்திறந்துள்ளது.

தங்களின் கிராமத்திற்கு அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தராததால், பல்வேறு கிராமங்களில் பொது மக்களே தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துப் போராடி வருவது பத்திரிகைகளில் செய்திகளாக வெளிவந்துள்ளன. எனவே, தேர்தலைப் புறக்கணிக்குமாறு புரட்சிகர இயக்கங்கள் பிரச்சாரம் செய்வது, வறட்டு கோஷமல்ல; மேலும், தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோருவது ஜனநாயக உரிமையாகும் என நீதிமன்றமே தீர்ப்பளித்திருக்கிறது.

எனினும், இந்த ஜனநாயக உரிமையைப் புரட்சிகர இயக்கங்கள் முழுமையாகப் பயன்படுத்த விடாமல் தடுக்க அதிகார வர்க்கம் முழு முனைப்புடன் செயல்படுகிறது. ஓட்டுக் கட்சித் தலைவர்கள் ஊர்ப் பொது நிலத்தை பட்டா போட்டுக் கொள்ள உதவும் போலீசு, தில்லை நகர் - காந்திபுரம் பகுதியில் பொது இடத்தில் தேர்தல் புறக்கணிப்பு அலுவலகம் திறந்து கொள்ள அனுமதிக்கவில்லை. ஆனாலும், பு.மா.இ.மு., தோழர்கள் அதே பகுதியில் வேறொரு (தனியார்) இடத்தில் 16.04.04 அன்று அலுவலகத்தைத் திறந்து போலீசின் மூக்கை அறுத்தனர்.

5.04.04 அன்று செந்தண்ணீர்புரத்தில் தேர்தல் புறக்கணிப்பு அலுவலகத்தைத் திறந்த பொழுது, அந்நிகழ்ச்சியில் ஒலிபெருக்கி வைத்துக் கொள்ள மறுத்துவிட்டது போலீசு. இந்நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய தோழர் காளியப்பன் ஒலிபெருக்கி இல்லாமலேயே உரையாற்றியபொழுதும், அப்பகுதி பொதுமக்கள் பெருந்திரளாக அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, போலீசின் முகத்தில் கரி பூசினர்.

ஓட்டுப் போடுவது நம் விரலாலேயே நம் கண்ணைக் குத்திக் கொள்வது போன்றது என்கிறோம். நாம் அடிப்படை வசதிகளைக் கோரி மட்டும் தேர்தலைப் புறக்கணிக்கச் சொல்லவில்லை. ஏகாதிபத்தியங்களும், அவர்களது அடிவருடிகளான தரகு முதலாளிகளும், இந்துவெறியர்களும் ஓட்டுக் கட்சிகளும் நம்மை ஆள்வதற்கு மாறாக, உழைக்கும் மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்பது என்ற புரட்சிகர அரசியல் திட்டத்தின் அடிப்படையில் தேர்தலைப் புறக்கணிக்கச் சொல்லுகிறோம்.

இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா என மலைத்துப் போகத் தேவையில்லை. வீரத் தெலுங்கானாவிலும், நக்சல்பாரியிலும் உழைக்கும் மக்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி, புரட்சிகர மக்கள் கமிட்டிகள் மூலம் ஆட்சி நடத்தினார்கள் என்பது வரலாறு. புரட்சி தான், மக்கள் சர்வாதிகார மன்றங்கள் தான் ஒரே தீர்வு!

திருச்சியில் மட்டுமின்றி, புரட்சிகர அமைப்புகள் இயங்கிவரும் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார இயக்கம் வீச்சாக நடந்து வருகிறது. அது உழைக்கும் மக்களின் உற்சாகமான பேராதரவோடு பற்றிப்படர்ந்துவருகிறது.

*ஓங்கட்டும்*
*உழைக்கும் மக்களின் புரட்சி!*

*ஒழியட்டும்*
*நாடாளுமன்ற மோசடி*
*ஜனநாயகம்!*